கண்ணன்

1-4-58
13 ந.பை

17 APR 1958

மதிப்புரை

வேடிக்கைக் கதைகள்

குழந்தைகளுக்குக் கதைகள் என்றல் ஒரு தனி ஆசை. அதிலும் மற்றக் கதைகளையெல்லாம்விட வேடிக்கைக் கதைகள் என்றல் மிகவும் ஆசை. பேய் பிசாசுக் கதைகள், அப்பறியும் கதைகள், யட்சிணிக் கதைகள் எல்லாவற்றையும்விட சிரித்து மகிழக்கூடிய கதைகளே குழந்தைகள் முதல் கிழவர்கள் வரையில் விரும்பக் கூடியவை. நம் நாட்டில் எத்தனையோ வேடிக்கைக் கதைகள் உண்டு. ஆனல் இந்தக் காலத்துக் குழந்தைகளுக்கு வேடிக்கையோடு புதுமையும் வேண்டியிருக்கிறது. இதை மனத்தில் கொண்டே நீதிபதி ஏ. எஸ். பி. ஐயர் அவர்கள் ரசமான பல சம்பவங்கள் கொண்ட அழகிய கதைகளைப் புனைந்துள்ளார். எளிய நடையில் வேடிக்கை - வேடிக்கையான கதைகளை இரண்டு பாகமாகத் தொகுத்து அல்லயன்ஸ் கம்பெனி மூலம் வெளியிட்டிருக்கிருர்கள். முதல் பாகத்தில் 63 கதைகளும் இரண்டாம் பாகத்தில் 52 கதைகளும் அடங்கியிருக்கின்றன. இந்தக் கதைகளை நீங்கள் பெரிதும் ரசிப்பீர்கள் என்று நம்புகிறேன். (கிடைக்கும் இடம்: அல்லயன்ஸ் கம்பெனி, த. பெ. 617, சென்னை-4. விலை முறையே ரூ. 1.50; 1.25.)

வாணி தமிழ் ஹிந்தி சுபோதினி

ஹிந்தி வேண்டுமா, வேண்டாமா என்ற பேச்சில் நாம் இறங்கவேண்டாம். அது தேசிய மொழியாக இருந்தாலும் சரிதான், இல்லாமல் போனலும் சரிதான், நமக்கு அதில் அக்கறை வேண்டாம். ஆனல் நாட்டின் பொது மொழி என்கிற அளவில் அதைக் கற்றுக்கொள்வது மிக மிக நல்லது. கற்றது என்றுமே வீண் போவதில்லை. பல மொழிகளில் தேர்ச்சி இருந்தால் அது நமக்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது. இதை எண்ணியே ஸ்ரீ ரா. வீழிநாதன் (கல்கி உதவியாசிரியர்) அருமையான புத்தகம் ஒன்றை எழுதியிருக்கிருர். வீட்டிலேயே புத்தகத்தை வைத்துக்கொண்டு சுலபமாக ஹிந்தியைக் கற்றுக்கொண்டு விடலாம். அத்தனை சுலபமான முறையில் கற்கும்படி இதை அவர் எழுதியிருக்கிருர். (வாணி பதிப்பகம், தபால் பெட்டி 239, சென்னை-1. விலை. ரூ 2.25)

குழந்தைப் பாடல்கள்

பெரியவர்களுக்குக் கதைகளோ கட்டுரைகளோ பாடல்களோ எழுதிவிடலாம்; பெரும் புகழும் பெற்றுவிடலாம். ஆனல் உங்களுக்கு ஏற்ற கதைகளை எழுதச் சொல்லுங்கள் பார்க்கலாம். கட்டுரைகள் தான் எழுதட்டுமே. அத்தனை சுலபமான விஷயமல்ல. அப்படியிருக்கும் போது கவிதை அல்லது பாடல் பாடி விடுவது எளிதான காரியமா? குழந்தைப் பாடல்கள் என்று தலைப்பு வேண்டுமானல் கொடுக்கலாம். ஆனல் குழந்தைகளுக்குரிய பாடலாக அவை பெரும்பாலும் இருப்பதில்லை. ஆனல் இந்தப் புத்தகத்திலே இருப்பவை அத்தனையும் குழந்தைகளுக்குரிய பாடல்கள்தாம். சில அருமையான பாடல்கள் இதிலே அடங்கியிருக்கின்றன. அவற்றைப் பாடலாம்; பாடி மகிழலாம். [சொர்ணமுத்து நிலையம், தென்மாப்பட்டு, திருப்புத்தூர் (இராமநாதபுரம் மாவட்டம்) விலை 25 காசு.]

செய்திகள்

வ. எ. சங்கம்

வளரும் எழுத்தாளர் சங்கத்தின் கோவைக் கிளை ஒன்று சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதில் அங்கத்தினர்களாகச் சேர விரும்புவர்கள் அழகனர், காரியதரிசி, வ. எ. சங்கம், மாச்சம்பாளையம், கோயம்புத்தூர் என்ற முகவரிக்கு எழுதவேண்டும்.

மலர் 9 இதழ் 7

1—4—1958

குழந்தைகளே !

உங்களுக்கெல்லாம் இப்போது பரீட்சை நெருங்கி விட்டது. கருத்தூன்றி மும்முரமாகப் படிக்கவேண்டிய சமயம். ஆயினும் பொழுது போக்கும் சமயங்களில் பாடத்தின் களைப்பை மாற்றக் கண்ணன் உங்களுக்கு உதவியாக இருக்கக்கூடும். தொடர்கதைகள் உங்கள் சோர்வை நீக்கி உற்சாகத்தைக் கொடுப்பதை அறிந்து மகிழ்ச்சியுறுகிறேன். ஓய்வு நேரத்தை இனிய பொழுதாகக் கழிக்கிற அளவுக்கு மட்டிலும் கண்ணனை நீங்கள் உபயோகப் படுத்திக்கொள்ளலாம்.

விடுமுறையில் நீங்கள் அனைவரும் கலந்து கொள்ளக்கூடிய போட்டி ஒன்றை வெளியிட உத்தேசித்துள்ளோம். வழக்கம் போல உள்ள தொடர்கதைப் போட்டியும் உண்டு.

நீங்களே செய்து பார்க்கக் கூடிய சிறுவர் மின்சார விந்தை பற்றிய கட்டுரைகள் படங்களுடன் வெளிவர வேண்டும் என்று பலர் எழுதி வருகிறார்கள். ஒழிந்த நேரங்களிலே உபயோகமான பொழுது போக்குக்குப் படவிளக்கத்துடன் கூடிய இத்தகைய கட்டுரைகளைக் கண்ணனில் வெளியிட்டுக் கொண்டுதான் வருகிறோம். இனியும் உங்கள் விருப்பத்தை நிறைவேற்ற முயலுகிறேன்.

அடுத்த இதழ் தமிழ்ப் புத்தாண்டு இதழ். எனவே அதிகப் பக்கங்களுடன் வெளியிட எண்ணியிருக்கிறோம். நெடுங்கதை ஒன்றும் அதில் இடம் பெற்றிருக்கும். குறித்த காலத்தில் உங்கள் ஊர்களில் கண்ணன் கிடைக்கவில்லையே என்ற குறை உங்களுக்கு இன்னும் இருந்து வருகிறது. விரைவில் இந்தக் குறை விலக ஆனதைச் செய்கிறேன்.

—ஆசிரியர்.



பெ. கலாசாமி, பி. ஏ.

தூத்துக்குடி இளைஞர் பி. கே. சாமியின் கதைகள்தான் நன்றாய் இருக்கும் என்பதில்லை; அவருடைய கையெழுத்தும் குண்டு குண்டாக எழுத்துப் பிழையின்றி அழகாக இருக்கும். அதே போல் சிறுவர்களுக்கு மட்டும்தான் எழுதுவார் என்பதில்லை; பெரியவர்கள் படிப்பதற்கும் எழுதக்கூடிய எழுத்தாளர். வர்த்தகத் தொழிலில் இருந்துகொண்டே கதை புனையும் இந்த இளைஞர் துணுக்குச் சித்திரங்கள் வரைவதிலும் பழக்கமுள்ளவர். முப்பது கதைகளுக்கு மேல் பல பத்திரிகைகளுக்கும் எழுதி வளர்ந்து வரும் எழுத்தாளர் வரிசையில் மதிப்புடன் விளங்குகிறார். உயர் நிலைப்பள்ளியிலும் கல்லூரியிலும் தொடர்ந்து ஆறு ஆண்டுகளுக்கு மேலாகக் கையெழுத்துப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்து எழுத்துத் தொழிலுக்கு அஸ்திவாரம் போட்டுக்கொண்டவர். இவர் வரைந்துள்ள துணுக்குச் சித்திரங்களும் கார்ட்டூன்களும் பல பத்திரிகைகளிலும் பிரசுரமாகியிருக்கின்றன. வர்த்தகத் தொழிலிலுள்ள இவருக்குத் தம் கதைகள் புத்தக உருவில் வெளிவரவேண்டும் என்ற அவா உண்டு. இதற்கு அவசரம் ஒன்றும் இல்லைதான்; ஆனால் ஆசையில்லாமல் போகுமா?

விறன்மிண்ட நாயனார்

2-11-83
சென்னை-600 008

அலைகள் மோதும் ஆழ்கடல் ஒரு புறம். மழை முகில்கள் கொண்ட மலை வரிசைகள் மறு புறம். இவற்றினிடையே வளப்பம் மிகுந்த நாடு சேரநாடு. இந்நாட்டில் செங்குன்றூர் என்னும் ஊரில் வேளாளர் குலத்தில் சிவனடியார் ஒருவர் தோன்றினார். அவரே பின்னால் விறன்மிண்ட நாயனார் எனப் புகழ்பெற்றவர். பிறப்பு முதலே அவர் சிவபிரானிடத்தில் அழியாத பற்றுக் கொண்டு விளங்கினார். அதனால் அவரை உலகப் பற்று அணுகவே அஞ்சியது.

சிவபிரான் எழுந்தளியிருக்கும் பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று அவர் தரிசனம் செய்து வந்தார். சென்ற விடமெல்லாம் அங்கங்கேயுள்ள சிவனடியார்களைத் தான் முதலில் வணங்குவார். அப்புறம்தான் அங்கே கோயில் கொண்டுள்ள பெருமானைத் தரிசனம் செய்வார்.

ஒரு சமயம் திருவாரில் கோயில் கொண்டு விளங்கும் தியாகராஜப் பெருமானைக் கண்டு களிக்க ஆவல் கொண்டவராய் அவ்வூரை அடைந்தார். அங்கேயுள்ள தேவாசிரய மண்டபத்தில் புகழ்பெற்ற சிவனடியார்கள் சிலர் அமர்ந்திருந்தார்கள். புகழ் மிக்க சுந்தரமூர்த்தி நாயனார் அந்தக் கோயிலுக்குள் நுழைந்து சென்றார். போகும் போது அங்கே அமர்ந்திருக்கும் சிவனடியார்க் கூட்டம் அவர் கண்களில் பட்டது. ஆயினும் அவர் அவர்களைக் கண்டும் வணங்காமல் செல்வதைக் கண்ட நாயனார் மனம் மிக வருந்தியது. ''அடியார்களை வணங்காமல் அலட்சியம் செய்த வன்தொண்டர் (சுந்தரர்) அடியார்க் கூட்டத்தினின்றும் புறக்கணிக்கத் தகுந்தவர். அவரை ஆட்கொண்ட சிவபெருமானும் புறம்பானவர்'' என்று தெய்வ வாக்குப் போலக் கூறினார். இதைக் கேட்ட சுந்தரர் விறன்மிண்ட நாயனார் சிவனடியாரிடத்துக் கொண்டிருக்கும் மாறாத பக்தியைக் கண்டு வியந்து நின்றார். அவருக்கு தம் தவறு தெரிந்தது. உடனே திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தினைப் பாடி அடியார்க் கூட்டத்தையும் வணங்கினார். சிவபெருமான் அங்கே தோன்றி, ''அடியார்கள் உள்ளத்தில் எப்பொழுதும் நான் வீற்றிருக்கிறேன்'' எனக் கூறி மறைந்தார். இவ்வாறு விறன்மிண்ட நாயனார் பல புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று ஆங்காங்கே அடியார்களையும் சிவபிரானையும் வணங்கி, கடைசிக் காலத்தில் ஈசனின் திருவடிகளில் மனம் ஊன்றியவராய், கைலையங்கிரியை அடைந்தார்.

—கிங்கரன்

9. பூசாரியார் சபதம்

அந்தக் காவற்காரனைத்தான் வேங்கையார் காளி கோயில் பக்கம் உளவு அறிந்துவர அனுப்பியிருந்தார். அவன் வந்து நின்றதும், ''என்ன?'' என்று அதட்டலாகக் கேட்டார்.

''பூசாரியார் வண்டி காளிகோயிலடியில்தான் கிடக்கிறது. அவரே தங்களைக் காண வந்திருக்கிறார்!'' என்றான் அவன்.

''என்ன பூசாரியாரே, எங்கே இப்படி?'' என்று மண்டபத்தின் உட்பகுதியை யடைந்த வேங்கையார் வினவினார்.

காட்டு நாகர் படை முழுவதும் அந்தக் கோட்டையின் பல பகுதிகளில் தங்க வேண்டியிருந்தது. அப்படியிருந்தும் அவர்களில் சிலரைக் காளிகோயில் திடலில் பாடியிறங்கலாம் என்று வேங்கையார் கட்டளையிட்டிருந்தார். வேங்கையாரின் துணையாட்கள் இந்தக் கட்டளையை நிறைவேற்றக் காளிகோயிலைச் சூழ்ந்துகொண்டார்கள். அந்தப் புனிதமான இடத்திலிருந்த உண்டியல், திரிசூலம், காணிக்கைச் சிலைகள் இவற்றையெல்லாம் பெயர்த்து வேறு இடத்துக்கு அப்புறப்படுத்தத் தொடங்கினார்கள். கோயிலைச் சுற்றி வேட்டையாடிய மிருகங்களையும் ஆடுகளையும் கோழிகளையும் கொண்டுவந்து நிரப்பினார்கள். அதைத் தம்மிடம் முறையிட்டுச் சொல்லவே பூசாரியார் வந்திருக்கிறார் என்பதை அறிந்துகொண்டார் வேங்கையார். பூசாரியிடம் தமக்குள்ள கோபத்தை இந்தச் சிறு நிகழ்ச்சி மூலமாக வெளிப்படுத்த எண்ணிய வேங்கையார், ''காளிகோயில் பூசாரி என்றால் கோயிலே உமக்குச் சொந்தமாகிவிடுமோ? அங்கே யார் வரலாம். யாரெல்லாம் வரக்கூடாது என்று கூற எனக்குத்தான் அதிகாரம். நீர் பழைய காலத்து ஆளாக இருக்கலாம். அதனால் என் வார்த்தையை அலட்சியப்படுத்த உமக்குப் பாத்தியம் வந்துவிடவில்லையே!'' என்றார்.

''அரசே!'' என்றார் பூசாரியார்.

''என்ன?''

''அடியேனுக்கு அரசர் கட்டளை பெரிதுதான். ஏனெனில் அரசர் இப்போது இந்த நாட்டின் தலைவராக இருப்பதனால்; ஆனால் அரசரைவிட அடியேனுக்குப் பராசக்தி மகாகாளி பெரியவள். ஏனெனில் அவள் இந்த உலகுக்கே என்றென்றும் தெய்வமாக விளங்குவதால்!''

''பூசாரியாரே! நாவை அடக்கிப் பேசும்.''

''ஆமாம்; அடக்கித்தான் பேசுகிறேன். நாளையே அரசர் நிலை மாறலாம்; சுயலாபத்துக்காக மக்களைக் கூட கைவிடலாம். ஆனால் என் அன்னை மகாகாளி அப்படி ஒருகாலும் எங்களைக் கைவிட மாட்டாள். பார்க்கலாம்; அவர்கள் திடலைவிட்டு அகலவில்லையானால் அவர்கள் இருந்த இடமே திடலாகிவிடும். அதைக் கூறிச் செல்லவே வந்தேன். வருகிறேன்!'' என்று வீராவேசத்துடன் கூறிவிட்டு, பூசாரியார் வெளியேறினார். என்ன காரணத்தாலோ யாருமே பூசாரியாரிடம் வாலாட்டுவதில்லை. வேங்கையாருக்கு இது தெரியும். அவருக்கும் பூசாரியாரிடம் சிறிது யோசனைதான். ஆயினும் பூசாரியார் இப்படித் துணிவோடு சப்தம் கூறுவார் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. அது உள்ளூற ஒருவிதச் சங்கடத்தைக் கொடுத்தது.

"பூசாரியே! அந்தக் காளி என்னை ஒன்றும் செய்துவிட மாட்டாள்! ஏனெனில் அவளுக்கு நான் இரண்டு உயிர்ப் பலிகள் தரப் போகிறேன். அவசியமானால் உன்னையே அவளுக்குப் பலியிட்டு விடுவேன், தெரிந்துகொள்!'' என்று வாய்விட்டு உரக்கக் கூவியவாறு பைத்தியக்காரன்போலச் சிரித்தார்.

அன்று இரவு கழிந்து மறுநாள் காலையில் துணையாட்களில் ஒருவன் ஓடோடி வந்து வேங்கையார் காலில் விழுந்தான்.

''மகாராசா! காளிகோயில் திடலில் யாரும் நுழைய முடிய வில்லை. இரவில் அங்கே சேமித்து வைத்திருந்த பண்டாரப் பொருள்கள், ஆடுகள், கோழிகள் எல்லாம் போன இடம் தெரியவில்லை'' என்று முறையிட்டான்.

அன்று நண்பகல் நேரத்தில் காட்டு நாகர் படை காளி கோட்டை எல்லைக்குள் நுழைவதாக இருந்ததால் வேங்கை யாருக்கு இதைப்பற்றிக் கவலைப்பட நேரமில்லை. வரவேற்பு ஏற்பாடுகள் நடைபெறுவதிலேயே அவர் கண்ணுங் கருத்துமாக இருந்து வந்தார்.

''சரி; அப்படியானால் காளிகோயில் திடலைவிட்டு உடனே வேறு இடம் பாருங்கள்! மற்றவற்றைப் பிறகு கவனித்துக் கொள்கிறேன்!'' என்று கட்டளை யிட்டுவிட்டுச் சென்றார்.

அவர் மனத்தில் மட்டும் ஏதோ ஒன்று சுருக்கெனத் தைத்துவிட்டதை அவர் உணர்ந்தார். சொல்லிய வண்ணம் செய்துவிட்ட பூசாரியைவிடத் தாம் மட்டமாகவா போய்விட்டோம் என்ற எண்ணம் அவர் நெஞ்சை வாள்கொண்டு அறுப்பதுபோல் அறுத்தது.

இதற்குள் கணஜண கணஜணவென்று நகரா முழங்கியது; முரசு ஒலித்தது; வெண் சங்கு ஊதியது. கொம்பு, எக்காளம், தப்பு, தாரை, தம்பட்டை முதலிய படைக்கல வாத்தியக் கருவிகள் முழங்கின. சின்னக்காளி வேங்கையார் சிங்காரமாய் அலங்கரித்துக்கொண்டு சேனை - தானைத் தலைவர்களும் கோட்டப் பெருமக்களில் சிலரும் மல்லர்களும் வில்லர்களும் கலைஞர்களும் புடைசூழ, காட்டு நாக அரசனை எதிர்கொண்டு அழைத்துவரப் புறப்பட்டார்.

அலைகள் போல் படைவெள்ளம் அலை அலையாகக் கண்ணுக்கு எட்டிய வரையில் வந்துகொண் டிருப்பது தெரிந்தது. மழைக் காலத்து ஈசல்போல் காட்டுப் பாதைகளிலிருந்து படைகள் முளைத்து வருவதுபோல் தோன்றினார்கள். சின்னக்காளி வேங்கையார் ஒருபுறம் மகிழ்ச்சியும் மறுபுறம் இகழ்ச்சியும் கொண்டவராக நின்றுகொண் டிருந்தார்.

10. திட்டி வாசலிலே பேரொலி

காளிகோட்டை கோலாகலமாகக் காட்சியளித்தது. அரண்மனையிலே புதிய விருந்தினர்களை உபசரிப்பதற்கான பலத்த ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன. அங்கங்கே கொட்டாரங்கள் அமைத்து, படை வீரர்களுக்குப் படைக்க வழி வகுத்திருந்தார்கள். நாகராசனது முக்கிய பரிவாரத்தினரே சுமார் இருநூறு பேருக்கு மேல் இருந்தார்கள். அவர்களுக்கு மட்டும் அரண்மனையில் ராஜரீக மரியாதைகளுடன் விருந்து நடைபெற முடிவாகியிருந்தது. அத்தனை பேரும் அமரும்படியான விசாலமான மண்டபம் வெகு நேர்த்தியாக அலங்கரிக்கப்பட் டிருந்தது.

கதிரவன் மலைவாயிலில் இறங்கியதும் அரண்மனை சரவிளக்குகளாலும் மணி விளக்குகளாலும் ஒளியுற விளங்கியது. விருந்தினர்கள் வரத் தொடங்கினார்கள். அவரவர் மதிப்புக்கேற்ற

முறையில் அவர்களை வரவேற்று, உபசரித்து ஆசனங்களில் உட்கார வைத்தார் காளிகோட்டை வேங்கையார். நாகர்களின் அரசன் வந்ததும் அவனை மார்புறத் தழுவி கையோடு அழைத்து வந்து அவன் பக்கலிலே அவரும் அமர்ந்துகொண்டார்.

முழவும் யாழும் இசைக்கத் தொடங்கின. குறுங்குழலும் திமிரியும் ஊதும் இசைவாணர்கள் அவர்களைப் பின்பற்றி இன்னிசை எழுப்பினார்கள். கணிகை மாதர் சிலர் காலில் சிலம்பு ஒலிக்க நடனம் ஆடினார்கள். விருந்தினர்கள் அனைவரும் தங்களையே மறந்து மகிழ்ந்திருந்தார்கள்.

இங்கே இவ்வாறிருக்க, அரண்மனைக் கோட்டைக்கு வெளியே அதே சமயத்தில் ஒரு வாலிபனும் ஒரு சிறுவனும் காணப்பட்டார்கள். கோட்டையே விருந்திலும் கேளிக்கையிலும் ஆழ்ந்திருந்ததால் அவர்களைக் கவனிப்பாரே யாருமில்லை. தப்பித் தவறி யாராவது கவனித்தாலும் அவர்கள் அதற்காகக் கலங்குகிறவர்களாகத் தோன்றவில்லை.

''இதோ பார், இளமாறு! இந்த வில் என் கையில் இருக்கும் வரையில் நாம் யாருக்கும் அஞ்சவேண்டியதில்லை. தயங்காமல் என்னோடு வா!'' என்று கூறிய நெடுமாறன், அம்பிலே கயிற்றைப் பிணைத்து அக்கரையிலே பாய்ச்சினான். அந்தக் கயிற்றின் மறு முனையை உயர்ந்த மரத்திலே இறுகக் கட்டிவிட்டான். ஒவ்வொருவரர்க அதைப் பிடித்துக்கொண்டே அகழியைத் தாண்டி, கோட்டைச் சுவரை அடைந்துவிட்டார்கள். ஆனால் கோட்டைக்குள்ளே எப்படிப் போக முடியும்?

உயரமும் உறுதியும் வாய்ந்த பாறைச் சுவர்மீது ஏறுவது இயலாத காரியமாகத் தோன்றியது.

இளமாறன் பார்த்துக்கொண் டிருக்கும்போதே இளைஞன் நெடுமாறன் வில்லினை மீண்டும் எடுத்தான். 'ஙொய்' என்று ரீங்காரம் செய்துகொண்டு அம்பு கோட்டைச் சாளரத்தை நோக்கிச் சீறிப் பாய்ந்தது.

அடுத்த கணம் அம்பிலே தொங்கிய கயிறு தரையிலே வந்து இடித்தது,

''உம்; கயிற்றைப் பிடித்துக்கொண்டு மேலே ஏறு; பார்க்கலாம்!'' என்று உற்சாகத்தோடு கூறினான் நெடுமாறன்.

சிறுவனுக்கும் இந்தச் சாகசங்களைக் கண்டு துணிவு பிறந்துவிட்டது. எதற்காக கோட்டைச் சுவர்மீது ஏறவேண்டும், ஏறி என்ன செய்யவேண்டும் என்றெல்லாம் அவன் இப்போது தயங்கவில்லை. சரசரவென்று வித்தையாடி ஏறுவதுபோலக் கயிற்றைப் பற்றிக்கொண்டு மேலே ஏறத் தொடங்கினான். எந்தச் சமயத்திலும் காவலாளிகள் கண்டு விடுவார்களோ என்று அம்பு பூட்டிய வில்லை அப்போதே தொகுக்கத் தயாராக நின்றான் நெடுமாறன்.

இளமாறன் ஏறிவிட்டான். அடுத்த கணமே நெடுமாறனும் அவனைத் தொடர்ந்து ஏறிவிட்டான். முதல் கோட்டையை இவ்வாறு அவர்கள் மிகச் சுலபமாகக் கடந்து விட்டார்கள்.

அடுத்தது அரண்மனை மாளிகைச் சுவர். அதில் ஏறி விட்டால் சாளரத்திலே இருந்த படிக்கட்டுகள் வழியாக இறங்கி விடலாம். ஆனால் ஆபத்து நிறைந்த காரியம் இது. காவலாளி கள் சுறுசுறுப்பாக இருப்பார்கள்!

ஆயினும் நெடுமாறனுக்கு ஆபத்தை வருந்தி அழைப்பது ஆனந்தம் தருகின்ற விளையாட்டாகவல்லவா இருந்தது! சரசர வென்று நாலு கணைகளை அந்த மாளிகைச் சுவரிலே ஏணிப் படிபோல் அமையும்படி தொடுத்தான் அவன்.

"நான் முதலில் ஏறிக்கொள்கிறேன், நீ பின்னால் வா!" என்று கூறிவிட்டு, வெகு அலட்சியமாக அந்தக் கணைகளிலே காலை வைத்து ஏறினான்.

சாளரத்தில் முதலில் காலை வைத்து இறங்கிக் கொண்டதும் ஏறமுடியாமல் திணறும் இளமாறனைக் கையைப் பிடித்து உயரே தூக்கிவிட்டான். மேலே ஏறி நெடுமாறன் அருகில் நின்ற பிறகுதான் இளமாறனுக்குத் தாங்கள் எவ்வளவு பெரிய ஆபத்தின் சிகரத்தில் நிற்கிறோம் என்பது தெரிந்தது. மாளிகைச் சுவர்களுக்குக் கீழே நெருப்புப் பந்தமும் கையுமாகக் குதிரை வீரர்களும் காவலாளிகளும் மிகுந்த எச்சரிக்கையோடு உலவிக் கொண்டிருந்தார்கள். அண்ணாந்து பார்த்துவிட்டால் போச்சு, மோசம்! அப்புறம் அவர்கள் உயிரோடு மீள்வது என்ற பேச்சுக்கே இடமிருக்காது.

எதிரி சுறுசுறுப்பாக இருக்கும்போதுதான் சுத்த வீரர் களுக்கு அருமையான யுக்திகளும் யோசனைகளும் தோன்று மாம். இளமாறன் இதைக் கேள்விப்பட்டதில்லை. ஆனால் இப் போது அதை நேரிலேயே கண்டுவிட்டான்.

சாளரத்திலிருந்து இருளிலே இறங்கிய ரகசியப் படிக் கட்டுகள் வழியாக அவன் கையைப் பிடித்து இழுத்துச் சென் றான் நெடுமாறன். இருவருக்குமே அந்தப் படிக்கட்டு எங்கே கொண்டு போய்விடும் என்பது தெரியாது. ஆயினும் அது எங்கே கொண்டுவிட்டாலும் சமாளித்துக் கொள்ளலாம் என்கிற துணிவு அவர்களுக்கு உண்டு.

சட்டென்று படிக்கட்டுகள் முடிவடைந்துவிட்டன. அதற் கப்பால் போக இடமில்லாதபடி ஒரு கற்சுவர் அவர்களைத் தடுத் தது. ஆனால் ஆளுயரத்துக்கு எட்டும்படி அந்தச் சுவரிலே ஒரு திட்டி வாசல் இருப்பது தெரிந்தது. அவர்கள் இறங்கிவந்த பாதை வழியாகக் குளிர்ந்த காற்றும் அந்தத் திட்டி வாசல் வழி யாக வெப்பமான காற்றும் வீசுவதை அவர்கள் உணர்ந்தார் கள். அந்த வாசல் வழியாக ஜணஜண, கணகண வென்று ஒலி கள் எழுந்தன. அவர்களைக் கண்ணி வைத்துப் பிடிக்கத்தான் வீரர்கள் இந்த வழியாக வருகிறார்களோ என்று இருவரும் சுவ ரோடு சுவராக இருளிலே பதுங்கிக்கொண்டு நின்றார்கள். அந்த ஒலி வர வர பேரொலியாகக் கேட்கத் தொடங்கியதே தவிர, குறைவதாகத் தோன்றவில்லை.

(தொடரும்)

பகை தீர்ந்தது

ப. ரா.

பரமசிவத்துக்கு வயிற்றெரிச்சல் தாங்க முடியவில்லை. தன் மகன் பாலுவின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை வைத்தான். ''ஏண்டா முட்டாள் பயலே! கணக்குப் பரீக்ஷையில் அடுத்த வீட்டு ராமு தொண்ணூறு மார்க்கு வாங்கி விட்டானமே. நீ எண்பத்தொன் பதுதானு வாங்கினய்? வெட்க மில்லையாடா உனக்கு?'' என்று இரைச்சல் போட்டான்.

அதே சமயத்தில் பக்கத்து வீட்டிலிருந்தும் கூச்சல் கிளம்பிக் கொண்டிருந்தது. ''மூன்று வேளை யும் மூக்குப் பிடிக்கச் சாப்பிடு வதில் ஒன்றும் குறைச்சல் கிடை யாது. கேவலம் ஒரு ஓட்டப் பந்த யத்தில் இந்த பாலுப் பயலை ஜயிக்க முடியாமல் போய் விட்டதாடா உனக்கு? மான் போலத் துள்ளியோடிப் போய், முதற் பரிசை அவன் தட்டிக் கொண்டு போய்விட்டானமே! என் மகனுக்கு இரண்டாவது பரிசு தான் கிடைத்தது என்று வெளியில் சொல்லிக்கொள்ளவே கூச்சமாக இருக்கிறதே!'' என்று பொங்கிய படி தன் பையன் ராமுவின் காதைப் பிடித்துத் திருகிக்கொண் டிருந்தான் கோவிந்தன்.

அங்கே பரமசிவம் ஒரு தம்ளர் தண்ணீர் குடித்தான்; இங்கே கோவிந்தன் கால் படி மோரைக் காலி செய்தான். ஆயினும் அவர் களுடைய வயிற்றெரிச்சல் அத்தனை எளிதில் தணிவதாகக் காணேம்! எப்படித் தணியும்? இவர்க ளிடையே போட்டியும் பொருமை யும் இன்று நேற்றைய விஷயங்க ளல்ல. பல வருஷங்களாக வேர் விட்டு வளர்ந்து வருபவை.

நெற்றி நிறைய திருநீறு பூசிக் கொண்டு சிவனை வணங்குகிறவன் பரமசிவம். கோவிந்தனுடைய நெற்றியை அலங்கரிப்பது பட்டை நாமம்; அவன் வழிபடும் கடவுள் திருமால். ''எங்கள் சாமிதான் உயர்ந்தது'' என்று இருவரும் சாதித்து அடிக்கடி சண்டை போட்டுக்கொண்டு நிற்பதுண்டு. அதிலிருந்து தொடங்கி எல்லா விஷயங்களிலும் போட்டி. இவர் களுக்கு நடுவே ஒரு பச்சை விற கைப் போட்டாலும் அது உடனே பற்றியெரிந்து சாம்பலாகிவிடும். பகையென்றல் அப்பேர்ப்பட்ட பகை!

அதே விரோதம் அவ்விரு குடும் பத்தினர் அனைவரையும் தொற் றிக்கொண்டிருந்தது. அவர்களது மனைவிமார் குழாயடியில் தண் ணீருக்காகச் சண்டை போட்டு ஒருவர் மீதொருவர் வசைமொழி களை அள்ளித் தெளித்துக்கொள் வார்கள். பரமசிவத்தின் வேலைக் காரி தங்கள் வீட்டு வாசலைப் பெருக்கிக் குப்பையை அடுத்த வீட்டு வாசலில் தள்ளிவிட்டுப் போவாள். கோவிந்தனது வேலைக் காரி மட்டும் இளைத்தவளா என்ன? ஐந்தே நிமிஷத்தில் குப்பையெல் லாம் வட்டியும் முதலுமாக மீண் டும் பரமசிவம் வீட்டு வாசலை அடை யும். இரண்டு வீட்டு நாய்களும் சமயம் வாய்த்தபோதெல்லாம் ஒன்றையொன்று கடித்துக் குதறிக் கொள்ளும். சேவற்கோழிகள் கொத்திக் கொக்கரிக்கும். இம் மாதிரியான சூழ்நிலையில் வளர்ந்து வந்தபோதிலுங்கூட ராமுவும் பாலுவும் மட்டும் சண்டை யின்றிச் சிநேகமாக இருந்தது தான் ஆச்சரியம்!

இவர்கள் படிப்பது ஒரே பள்ளி யில், ஒரே வகுப்பில். இருவரும் புத்திசாலிச் சிறுவர்கள். படிப்பு, விளையாட்டு எல்லாவற்றிலும் முன்னணியில் நிற்பவர்கள். ஒரு நாள் ராமு முதல் மார்க்கு வாங்கி ஞல் இன்னொரு நாள் பாலு

வாங்குவான். விளையாட்டில் பாலு வின் கட்சி ஒரு முறை ஜயித்தால் ராமுவின் கோஷ்டியார் அடுத்த முறையில் ஜயிப்பார்கள். எது எப்படி நேர்ந்தாலும் இவ்விருவரிடையே போட்டி ஏற்படவில்லை - அது உண்டாகும்படி அவர்களது தகப்பன்மார் போட்ட தூண்டு கோல் பலன் தராது போயிற்று.

''கடவுளே! என்ன வேடிக்கை, இது! நாம் தவறு செய்தால் நமக்குப் புத்தி சொல்ல வேண்டிய பெரியவர்களே இப்படி அறியாத் தனமாக நடந்துகொள்கிருர்களே! இந்தப் பகையினுல் தீமை தவிர இவர்களுக்கு நன்மை எதுவும் விளையப் போவதில்லையே!'' என்று இந்தச் சிறுவர்கள் அங்கலாய்த்துக் கொள்வதுண்டு.

* * *

தன் வீட்டின் முன்புறத்தில் ஒரு பலகாரக் கடை வைத்தான் பரமசிவம். கோவிந்தனுக்கு வழக்கப்படியே வயிற்றெரிச்சல் கிளம்பிற்று. வேறு ஒருவனுக இருந்தால் பக்கத்தில் ஒரு வெற்றிலை பாக்குக் கடையைத் திறந்திருப்பான். அங்கே பலகாரம் சாப்பிட்டுத் தேநீர் குடித்தவர்கள் இங்கே வந்து வெற்றிலை பாக்கு, சோடா வகையராக்கள் வாங்க, இரு கடைகளுக்குமே நல்ல வியாபாரம் ஆகியிருக்கும். ஆனல் இந்தக் கடைகள் லாபத்தைக் கருதியா திறக்கப் பட்டன?

கோவிந்தனும் தன் வீட்டு வாசலில் இன்னெரு பலகாரக் கடை வைத்தான். அடுப்புக்களின் புகையும் வெங்காய வாசனையும் வீதிமுனை வரையில் மண்டின. ஊரின் ஒரு சாரார் பரமசிவத்தின் வாடிக்கைக்காரர்களாகி ஆதரித்தனர். இன்னெரு பிரிவினர் கோவிந்தனது ஆதரவாளர்கள். ஆதரவு என்று பெயர்தானே தவிர இரு இடங்களிலும் காசு அதிகம் புரளவில்லை. பரமசிவம் வந்தவர்களது வயிற்றுக்கு உணவு தருவதுடன் செவிக்கு உணவாகப் பேசும் பேச்சுக்களெல்லாம் கோவிந்தனை இழிவுபடுத்துவதாக இருக்கும். சாப்பிடுகிறவர்கள், கேட்டுத் தலையை ஆட்டுவார்கள், அவசியமானபோது தாங்களும் அனுசரணையாக இரண்டு வார்த்தைகள் சொல்லி வைப்பார்கள். அப்புறம்

காசுக்கும் கடன் சொல்லிவிட்டுப் போவார்கள்.

இதேதான் கோவிந்தன் கடையிலும் நடந்து வந்தது. இரண்டு பேருக்கும் சரியான நஷ்டம். ஆனால் இருவருமே கடையை மூடிவிடத் துணியவில்லை. 'அவன் முதலில் மூடட்டும்' என்ற மனப்பான்மை நிலவியது. முதலில் கடையைப் பிரிப்பவன் தன் தோல்வியைத் தானே ஒப்புக்கொள்வதாகுமல்லவா?

ஒரு நாள் காலை. பரமசிவம் ஒரு புதுப் பட்டுச்சட்டையை அணிந்து கொண்டு வந்து ஜம்மென்று கடையில் உட்கார்ந்தான். உடனே கோவிந்தனின் குரல் அவன் காதில் விழுந்தது. "முட்டாள் பயல்! கடையைச் சரியாக நடத்தத் தெரியாதவனுக்குப் பட்டுச் சொக்காய் வேறு கேடா?"

இது போதாதா? பரமசிவம் வெளியே வந்தான். "ஏண்டா கழுதை மகனே! நீ மட்டும் கடையை அழகாக நடத்துவதாய் நினைத்துக்கொண்டிருக்கிறாயோ?" என்று சண்டைக்குக் கொடியேற்றினான். எதிர்பார்க்கக் கூடியவாறே வாய்ச் சண்டை கைகலப்பாக மாறிற்று. முதலில் கிழிந்தது அந்தப் பட்டுச் சட்டை. இரு கடைகளிலும் உட்கார்ந்திருந்த சோதாக்கள் முழு மனத்துடன் போரில் கலந்துகொண்டனர். தட்டுக்கள், கண்ணாடித் தம்ளர்கள், எரியும் விறகுக் கட்டைகள் முதலிய பல ரக ஆயுதங்கள் சகஜமாகப் பிரயோகித்துக் கொள்ளப் பட்டன.

அரை மணி நேரம் நீடித்தது யுத்தம். இரு தரப்பினருக்கும் வெற்றி தோல்வி இல்லை. தூரத்தில் போலீஸார் வருவது கண்டதும் துருப்புக்கள் மெல்ல நழுவி விட்டன. பரமசிவமும் கோவிந்தனும் மாத்திரம் இன்னும் களத்தில் கட்டிப் புரண்டுகொண்டிருந்தார்கள்.

இவ்வாறாக இந்த இரு கடைகளும் தம்மைத் தாமே மூடிக்கொண்டு விட்டன. பொருள் நஷ்டம், மான நஷ்டம் எல்லாம் அடைந்த பின்னராவது இவர்களுக்குப் புத்தி வந்ததா என்றால், அதுவும் இல்லை!

மாலை வேளை. ஊர்ப் பிள்ளையார் கோவில் பிராகாரத்தில் அமர்ந்து ராமுவும் பாலுவும் விதியை நொந்துகொண் டிருந்தனர். அன்றைய கோர யுத்தத்தைக் கண்கூடாகப் பார்த்ததிலிருந்து அவர்கள் அடைந்த வேதனை சொல்லத்தரமன்று. பகலில் சாப்பிட வீடு செல்லாமல் இங்கேயே பட்டினியாகக் கோவிலில் பழி கிடந்தார்கள்.

''நம்மால் என்னடா பாலு செய்ய முடியும்? ஏதாவது சொல்லப் போனால் மழையில் நனைந்த குரங்குக்குப் புத்தி கூறிய தூக்கணங்குருவியின் கதிதான் நமக்கும் நேரும். கடவுளாகப் பார்த்து இவர்களுக்குக் கண்ணைத் திறந்து விட்டால்தான் உண்டு'' என்றான் ராமு. பாலு 'ஆம்' என்று தலையை அசைத்தான்.

''அப்படிச் சொல்லுங்கள், தம்பிகளா! சபாஷ்! மனிதனால் முடியாதது தெய்வத்தினால்தான் இயலும் என்று இப்போதாவது உணர்கிறீர்களே'' என்றொரு குரல் கேட்டது. சிறுவர்கள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தனர்.

துதிக்கையும் தொந்தியுமாகச் சாக்ஷாத் விக்னேசுவரப் பெருமான் அங்கே நின்றுகொண் டிருந்தார்! புன்னகை தவழும் அவர் முகமும் குறும்புப் பார்வையும் அவர்களுக்கு விரைவில் தைரியம் அளித்தன. அவர்கள் முதுகில் தட்டிக் கொடுத்து அன்போடு ஏதோ சொன்னார் பிள்ளையார்.

அது என்னவென்று இப்போது கேட்காதீர்கள். கடவுளே ரகசியமாகச் சொல்லி யிருக்கும்போது உரிய சமயத்துக்கு முன்பு நான் அதை வெளியிடுவது தவறல்லவா?

* * *

''என்ன! காட்டு யானையா? நம் கரும்புக் கொல்லையிலா? என்னடா உளறுகிறாய்?'' என்று அதட்டினான் பரமசிவம் தம் மகனை.

''நிஜமாகத்தான், அப்பா. என் கண்ணால் பார்த்தேன். ஒரேயடியாகக் கரும்புகளைப் பிடுங்கியெறிந்து, மிதித்துத் துவைத்து நாசம் செய்துகொண் டிருக்கிறது'' என்று சாதித்தான் பாலு. பிறகு துப்பாக்கியை எடுத்துக் கொண்டு புறப்படுவதைத் தவிரப் பரமசிவத்துக்கு வேறு என்ன வேலை? பலகாரக் கடையில்தான் ஏராள நஷ்டம் ஏற்பட்டு விட்டது. அரும்பாடு பட்டுப் பயிரிட்ட கரும்புத் தோட்டமும் அழிந்து போனால்?

இதே விதமான கவலையுடன் தான் கோவிந்தனும் ஓடி வந்து கொண்டிருந்தான். அவன் தோளிலும் ஒரு துப்பாக்கி! அவனும் கரும்பு பயிரிட்டிருக்கிறானே!

சந்தேகத்துக்கிட மில்லாமல் அங்கே அந்தக் காட்டு யானை துவம்சம் செய்துகொண் டிருந்தது. பாரபக்ஷம் காட்டாமல் இரு தோட்டங்களிலும் சமமான நாசவேலை. முழுசாக ஒரு கரும்பு கூட மிஞ்சாதென்று தோன்றியது.

'டுமீல்' என்று பரமசிவம் சுட்டான். அப்போது யானை அவன் தோட்டத்தில் இருந்தது. அப்போது கோவிந்தன் சும்மாப் பார்த்துக் கொண்டு நின்றான்.

யானையைக் குண்டு தாக்கவில்லை. துதிக்கையை உயரே தூக்கிப் பிளிறிக் கொண்டு நிதானமாக அவனை நோக்கி வரத் தொடங்கிற்று அது. யானையா அப்படி வந்தது! மரணம் அல்லவா அப்படி நெருங்குகிறது! உயிர்ப் பயம் மனத்தைக் கௌவப் பரமசிவம் மீண்டும் சுட்டான். இரண்டு, மூன்று..பத்துக் குண்டுகள். ஒன்றாவது யானையின்மீது படவேண்டுமே! ஊஹூம், அது என்ன மாயமோ!

ஓடுவதற்குக் கூடச் சக்தியின்றிப் பரமசிவம் வெலவெலத்து நின்றான். துப்பாக்கி அவன் கையினின்று நழுவிக் கீழே விழுந்தது. யானையும் அவனைத் துதிக்கையால் இறுகப் பற்றி மேலே தூக்கியது. ''சரி, யானை இப்போது நம்மை வீசி எறிந்துவிடும். அதோடு தீர்ந்தது'' என்று நடுக்கத்துடன் எண்ணிய பரமசிவம் கண்களை இறுக மூடிக் கொண்டான்.

அவ்வளவு சீக்கிரம் அவனுடைய வேலையை முடித்துவிடும் ஆவல் யானைக்கு இல்லை போலும்! அது தூக்கிப் பிடித்த இடத்தில் ஒரு பெரிய மரக்கிளை. அங்கே அவனை ஒரு கணம் நிறுத்திக்கொண்டு ''வீல்'' என்று ஒரு கத்தல் போட்டது. பரமசிவம் கண்களைத் திறந்தான். தடுமாற்றத்துடன் கிளையை இரு கைகளாலும் பற்றிக்கொண்டு தொங்க ஆரம்பித்தான். அந்தக் கணமே துதிக்கையின் பிடி தளர்ந்தது. அவனை அப்படியே திரிசங்கு ஸ்வர்க்கத்தில் ஊசலாட விட்டு விட்டு யானை நேரே கோவிந்தனை நோக்கி நடந்தது.

தான் இன்னும் அந்த மிருகத்தின் கண்களுக்குப் படவில்லையென்று நினைத்திருந்த கோவிந்தன் முதலில் திகைத்துப் போனான். அத்தனை சிறிய கண்கள் கேவலம் நிலவொளியில் இவ்வளவு கூர்மையாகப் பார்ப்பது எங்ஙனம் என்று அதிசயித்தவாறே துப்பாக்கியை எடுத்துச் சுட்டான். ஒன்றன் பின் ஒன்றாக பத்துத் தோட்டாக்கள்.

என்ன மாயமோ அது! துப்பாக்கி வெடித்தது, புகைந்தது. மருந்தின் நாற்றத்தை நாற்புறமும் பரப்பியது. ஆனால் பாழும் யானை அசைந்து கொடுக்கவில்லை. அந்தத் துதிக்கையின் பிடி தன்னுடலைச் சுற்றுவதை உணர்ந்தான் கோவிந்தன். தொடர்ந்து எங்கோ எடுத்துச் செல்லப்படும் உணர்ச்சி. அடுத்த நிமிஷம் அதே ''வீல்'' என்ற சப்தம். அவன் கைகள் தடவின. ஒரு மரக்கிளையை இறுகப் பற்றின.

இன்னுமொரு நிமிஷம் கடந்தது. யானையைக் காணோம். பூமியிலிருந்து ஐம்பதடி உயரத்துக்கு மேலே ஒரே மரக்கிளையை உடும்புப் பிடியாகப் பிடித்துப் பரமசிவமும் கோவிந்தனும் தொங்கிக்கொண் டிருந்தனர். இப்போது ஒருவரை யொருவர் கண்டு பொறாமைப்படும் நிலையில் அவர்கள் இல்லை. பிடி சற்றுத் தளர்ந்

டாக்டர்: ஏண்டா ரகு, உனக்குத்தான் உடம்பு ஒண்ணுமில்லையே? எதற்காக மருந்து கேட்கிறாய்?

ரகு: எனக்கு வேண்டாம் ஸார்! மூட்டைப் பூச்சிக்கு!

தாலும் கீழே விழுந்து எலும்பு நொறுங்கிவிடுமென்று அவர்களுக்குத் தெரியும்.

ஆனால் எத்தனை நேரத்துக்குத்தான் இப்படித் தொங்குவது? இப்போதே கைகளில் ரத்த ஓட்டம் குறைந்து தளர்ச்சி தோன்றுகிறதே! உடம்பெல்லாம் அங்குலம் அங்குலமாக வலி வேறு. சாவை எதிர்நோக்கும் சமயத்தில் பகையுணர்ச்சி மறைந்தது.

''தம்பி, கோவிந்தா!'' என்று முனகி மௌனத்தைக் கலைத்தான் பரமசிவம்.

''என்ன அண்ணே, பரமசிவம்!'' என்று பதில் முனகல் வந்தது.

''என்னால் தொங்க முடியவில்லை. நான் பிடியை விட்டுவிடப் போகிறேன். இந்த அவஸ்தையைவிடச் சாவு மேல், தம்பி. ஆனால் சாகுமுன் ஒரு வார்த்தை. முட்டாள்தனமாக உன்னிடம் ஓயாச் சண்டை போட்டுக்கொண்டே எத்தனை வருஷங்களைக் கழித்து விட்டேன்! இப்போதுதான் என் தவறு எனக்கு விளங்குகிறது. என்னை மன்னித்து விடு. நான் போனபிறகு என் மனைவியையும் மகனையும் காப்பாற்றி வரும் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன்..'' என்று சொல்வதற்குள் பரமசிவத்தின் கண்களில் நீர் நிரம்பிவிட்டது. அவன் தேம்பி அழத் தொடங்கினான்.

கோவிந்தன் மட்டும் அழாதிருப்பானா? அவன் சொல்ல நினைத்த அதே வார்த்தைகளையல்லவா பரமசிவம் சொல்லிவிட்டான்!

இருவரும் அழுதார்கள். ஆனால் ஒருவரது கண்ணீரை மற்றவரால் துடைக்கத்தான் வசதியில்லாதிருந்தது. அவர்களது உள்ளத்தில் பல வருஷ காலமாய்க் குடி புகுந்திருந்த பகையென்னும் அழுக்கை இந்தக் கண்ணீர் கரைத்துவெளியேற்றியது.

இருவரும் தளர்ச்சியுற்று ஏக காலத்தில் கிளையின் பிடியை விட்டார்கள். ஆனால் 'தொப்'பென்று கீழே விழுந்து நொறுங்கவில்லை! இலவம் பஞ்சு காற்றில் மிதந்து வருவது போல அவர்களது உடல்கள் பூமியை நோக்கி இறங்கின. தம் கால்கள் மெத்தென்ற புல்தரையில் பட்டதும் பரமசிவமும் கோவிந்தனும் ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்து கொண்டார்கள்.

இன்னுமோர் அற்புதம்! சற்று முன் நாசமாகிக் காட்சி தந்த இருவரது கரும்புத் தோட்டங்களும் யானை வந்து போன சுவடே தெரியாத விதமாகப் பழைய செழிப்புடன் தோன்றின.

தோள்மீது கை போட்டுக் கொண்டு நடந்த இருவரும் வழியிலிருந்த பிள்ளையார் கோவிலில் ராமுவையும் பாலுவையும் கண்டார்கள். சாக்ஷாத் விநாய மூர்த்தியேதான் அந்தக் காட்டு யானையாக வந்து திருவிளையாடல் புரிந்து தங்களை ஒற்றுமைப் படுத்தினாரென்று பையன்கள் விவரித்தனர். தெய்வத்தையன்றி வேறு யாரால் அத்தகைய அற்புதங்கள் நிகழ்த்த முடியும் என்று பெற்றோரும் நம்பினர்.

நாணிக்கையாக ஆளுக்கு நூறு தோப்புக்கரணங்கள் போட்டு வணங்கிச் சென்றனர். இந்த மாஜி விரோதிகளைக் கண்டு விக்னேசுவரர் புன்னகை பூத்தார். ராமுவும் பாலுவும் அக மகிழ்ந்தனர்.

சோம்பேறி

விஜயா

கண்ணனுக்குப் படிப்பதென்றாலே வேம்பாகக் கசக்கும். இப்படி இருக்கும்போது அவனுக்குப் பரீக்ஷை நெருங்கிவிட்டது. அவன் அம்மாவோ ரொம்ப கண்டிப்பான பேர்வழி. நொண்டிச் சாக்கு எது சொன்னாலும் அவள் ஒப்பமாட்டாள்.

கண்ணனுக்கு ஒரே கஷ்டமாக இருந்தது. இந்தச் சமயத்தில்தான் ஒரு நாள் அந்த ஊருக்கு, உலகப் பற்று நீங்கிப் பிறர் நலம் கருதி எப்பொழுதும் கடவுள் தியானத்தில் ஈடுபட்டிருக்கும் துறவி ஒருவர் விஜயம் செய்திருந்தார். அவரைக் காணத் தன் பெற்றோருடன் அவனும் சென்றிருந்தான். அன்று மாலை அங்கே ஒரே கூட்டமாக இருந்தது. கூட்டத்தின் மத்தியில் அமர்ந்து அந்தச் சுவாமிகள் தெய்வபக்தியைப்பற்றிப் ஓர் அரிய சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருந்தார். மக்கள் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்பதை விளக்கமாகக் கூறினார் சுவாமிகள். அவர்கள் பேசியது கண்ணனைப் போன்ற ஒரு சிறு குழந்தைகூடப் புரிந்து கொள்ளும்படியாக இருந்தது.

அன்று இரவு படுக்கையில் படுத்தவாறு சுவாமியை வேண்டிக் கொண்டான். ''சுவாமி, கிருஷ்ண பரமாத்மா....நீதான் என்னைக் காப்பாத்த வேணும்; நான் பரீக்ஷைக்குப் படிக்கவே இல்லை. எப்படி எழுதுவது? நீதான் எனக்குப் பதிலாகப் போய், பரீக்ஷையை

எழுதவேணும், நீதான் நினைத்த ரூபம் எடுப்பாயாமே? எனக்காக, என்னைப்போலவே வந்து நீயே பரீக்ஷையை எழுதேன்'' என்று பலவாறு சுவாமியை வேண்டிக் கொண்டான்.

என்ன ஆச்சரியம்! உடனே அவன் எதிரே பளீரென்று ஒளியுடன் கிருஷ்ண பரமாத்மா நிற்பது தெரிந்தது. சிரித்துக் கொண்டே அவர், ''குழந்தாய், உன்னிஷ்டம்போலவே நானே உன்னைப்போல் உனக்குப் பதிலாகப் போய் உன் பரீக்ஷையை எழுதுகிறேன். அவ்வளவுதானே உனக்கு வேண்டும்?'' என்றார்.

''ஆமாம்..ஆமாம்..அதுவே தான்..'' எனச் சந்தோஷத்துடன் கூறினான் கண்ணன்.

பரீக்ஷைத் தினமும் வந்தது. கண்ணன் விடிகாலையிலேயே எழுந்து, தானே பரீக்ஷை எழுதுவதுபோல் பாசாங்குக்காகப் பலகை, பேப்பர் இவைகளையெல்லாம் தயார் செய்துகொண்டு தாயிடம் சொல்லிக்கொண்டு ஒன்பது மணிக்குச் சரியாக வீட்டை விட்டுப் புறப்பட்டு, நேராக எங்கோ ஒரு ஏரி கரையில் போய் உட்கார்ந்துவிட்டான். அவனுக்குப் பதிலாகத்தான் கிருஷ்ணபரமாத்மாவே பரீக்ஷை எழுதுகிறாரே, அவனுக்கு என்ன பயம்?

பிரதிதினம் இப்படியே பரீக்ஷை முடியும்வரை கண்ணனும் ஏரி கரைக்குப் போய்விடுவான். கிருஷ்ணரும் கண்ணனைப்போல் பள்ளியில் பரீக்ஷை எழுதுவார். பரீக்ஷை எல்லாம் முடிந்தன. அன்று மாலை கண்ணனிடம் வந்தார் கிருஷ்ண பரமாத்மா. ''பரீக்ஷையெல்லாம் உனக்குப் பதிலாக உன்னைப் போலவே நான் பள்ளி சென்று எழுதிவிட்டேன்'' என்றார்.

''எப்படி எழுதினாய்?'' என்று கூடக் கேட்கத் தோன்றாமல் சந்தோஷத்துடன், ''உம்..உம்..'' என்று தலையை ஆட்டினான் கண்ணன்.

பரீக்ஷைத் தாள்களைப் பரிசோதித்து முடிவு சொல்லும் தினம் வந்தது. கண்ணன், தன் பெயர் தான் முதலில் சொல்லுவார்கள் என்று ஜம்பமாக உட்கார்ந்திருந்தான். ஏனென்றால் சுவாமியே தனக்குப் பதில் எழுதியிருக்கும் போது தான்தானே முதல் வர வேண்டும் என்று எண்ணினான்.

ஆனால் வாத்தியார் பெயர்களைப் படிக்கப் படிக்க அவன் வயிற்றில் புளியைக் கரைத்தது. அவன் பெயர் இன்னும் வரவே இல்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான். இருப்பே கொள்ளாமல் தவித்தான். கடைசியில் அவனுடைய பெயரைத் தேறுதவர்கள் வரிசையில் வாசித்தார் வாத்தியார்.

பிறகு, ''கண்ணா..என்ன, நீ பள்ளிக்கூடம் வருவது படிக்கவா, விளையாடவா? பரீக்ஷையில் ரொம்ப மோசமாக எழுதியிருக்கிறாயே? உன் தந்தைக்கு ரிபோர்ட் பண்ணப் போகிறேன்'' என்று கடுமையாகக் கோபித்துக் கொண்டார்.

கண்ணனுக்கு ஒரே ஏமாற்றமாகவும் அவமானமாகவும் இருந்தது. பள்ளிக்கூடம் விட்டதும் நேரே ஏரிகரைக்குச் சென்று ஓவென அழுது தீர்த்தான். பிறகு, ''ஏ கிருஷ்ணா, நீ ஏன் என்னை மோசம் செய்தாய்? எனக்குப் பதிலாகப் பரீக்ஷை எழுதி என்னை முதல் வகுப்பில் பாஸ் பண்ண வைப்பாய் என்று நம்பினேனே. இப்படியா என்னைக் கடைசியாக வரும்படி பண்ணுவது?'' என்று கோபத்துடன் சுவாமியிடம் முறையிட்டான்.

அப்போது கிருஷ்ணர் அவன் முன் பழையபடி சிரித்துக் கொண்டே நின்றார். ''அப்பா.. குழந்தாய்..நீ என்னைக் கேட்டுக் கொண்டபடியே நான் செய்தேன். உன்னைப் போலவேதானே என்னைப் போய் எழுதச் சொன்னாய்? ஆகையால் நானும் உன்னைப்போலவே உனக்கு எவ்வளவு தெரியுமோ அவ்வளவு எழுதினேன். அது என் தப்பில்லையே?'' என்றார்.

''நீ சுவாமி ஆச்சே! உனக்கு எல்லாம் தெரியும்னுதானே உன்னை அப்படி வேண்டிக்கொண்டேன்'' என்றான் கண்ணன்.

''அப்படி அல்ல, குழந்தாய். நீ என்னை வேண்டிக்கொண்டது, உன்னைப் போலவே நான் போய் எழுதவேண்டும் என்று. நீ நன்ருகப் படித்திருந்தால் உனக்கு எல்லாக் கேள்விகளுக்கும் விடை தெரிந்திருக்கும். அப்போது உன்னைப்போல் சென்ற எனக்கும் எல்லா விடைகளையும் எழுத முடிந்திருக்கும். நீ உன் வேலையைச் செய்யாமல் சோம்பேறியாக இருந்துவிட்டு, பிறகு என்னை இப்படி வேண்டிக்கொண்டால் பலன் இப்படித்தான் இருக்கும்'' என்று சொல்லி மறைந்தார்.

''அட கடவுளே, அப்போ இந்தப் பரீக்ஷையிலும் நான் பெயிலா? நான் செய்தது தப்புத்தான்..என் காரியத்தைச் செய்யச் சோம்பல் பட்டேன். பேராசையால் உன்னை அப்படி வேண்டிக்கொண்டேன். என்னை மன்னித்துவிடு, கடவுளே. அன்றைக்குச் சுவாமிகள் சொன்னது இப்போதுதான் நினைவு வருகிறது.

''நாம் செய்யவேண்டிய காரியங்களைச் சரியாகச் செய்து விட்டால் சுவாமி நம்மை என்றும் காப்பாற்றுவார் என்றுதானே சொன்ஞர். நான் இனி என் காரியத்தைச் சரிவர செய்கிறேன். சுவாமி, இனி நீதான் காப்பாற்றவேணும்'' என்று கைகளைக் கூப்பினுன்.

''கண்ணு....ஏய் கண்ணு.... எழுந்திருடா..கமலா, பாரு உன் பிள்ளையை! நேற்றெல்லாம் சுவாமிகளின் அருள்மொழிகளைக் கேட்டான். ரொம்பப் பக்தி வந்து விட்டது. தூக்கத்தில் கூடக் கையைக் கூப்பி ஏதோ சொல்லுகிருன், பார்'' என்ருர் கண்ணனின் தந்தை பெருமையுடன்.

''ஆமாம், மகான்கள் பேசினுல் குழந்தைகளுக்குக்கூட மனத்தில் அப்படியே படிந்துவிடுகிறது'' என்ருள் அவன் தாய் கமலா.

தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு விழித்தான் கண்ணன். எதிரே அவன் அப்பாவும் அம்மாவும் பெருமை பொங்க அவனைப் பார்த்துக்கொண்டு நின்ருர்கள்.

''நல்ல வேளை..நான் கண்டது கனவுதான். உண்மையில் நான் பெயில் இல்லை. இன்னும் பரீக்ஷைக்கு ஒரு வாரம் இருக்கிறதே. நான் நன்ருகப் படித்து 'பஸ்ட்' வருவேன். ஸ்வாமி, நீதான் துணை புரியவேணும்'' என்று பிரார்த்தித்துக்கொண்டு படுக்கையை விட்டெழுந்தான் கண்ணன்.

அன்றே அவன் சோம்பேறித்தனம் ஒழிந்தது. அக்கறையுடன் படித்து நல்ல மார்க்குகள் வாங்கி எல்லோரையும் வியப்பிலும் சந்தோஷத்திலும் ஆழ்த்தினுன்.

பலி

ஜே. எம். சாலி

எங்கள் தஞ்சை ஜில்லாவின் கிராமமொன்றிற்குச் சென்றிருந்தேன். சக மாணவத் தோழர் ஒருவரின் அழைப்பு என்னை அங்கே அழைத்துச் சென்றிருந்தது. பொன்னித் தாயால் வளம் பெறும் சின்னக் கிராமந்தான் அது. பார்வை பறக்குமிடமெங்கணும் பசுமை போர்த்த வயல் வெளிகளே நிறைந்து நின்றன. கற்பனைக்கு வனப்பளிக்கும் அழகான சிற்றூர் அது என்றுதான் சொல்ல வேண்டும்.

மாலை நேரம். மங்கலான மஞ்சள் வெயில் மட்டும் பொன்னொளியை மெல்லப் பரப்பி நின்றது. காவேரிக்கரையில் கவலை மறந்து உட்கார்ந்திருந்தோம். நீல நெடுவானம் புனலிலே பொலிவோடு தெரிந்தது. உள்ளம் உவகையால் துள்ளியது. அருகிலிருந்த ஆலமரத்தடி என் பார்வையில் பட்டது. சவம் புதைத்த சமாதிபோல் எதையோ ஒன்றினை அங்கே எழுப்பியிருந்தனர். அதைப் பற்றி விசாரித்தேன். அவர் சொன்ன கதை என் நெஞ்சைத் தொட்டது. நடந்தது கதையோ, அல்லது 'கப்ஸா'வோ, நான் ஆராய்ச்சியில் இறங்க முற்படவில்லை.

அந்தக் கதை இதோ:

நம்பியென்றால் ஊரிலே அனைவருக்கும் தெரியும். சின்னக் குழந்தைகளும் நம்பியின் பெருமை பேசும். வயது முதிர்ந்தவர்களும் நம்பியெனில் உவகை கொள்வர். நம்பியென்னும் அந்த ஆண் குரங்கிற்கு அவ்வளவு தூரம் கிராமத்தில் மதிப்பு இருந்தது. நெடுநாளாக அந்தக் குரங்கு ஊரில் இருந்துவந்தது. அம்மன் கோயிலருகே நிற்கும் பாதுமை மரந்தான் அதன் இருக்கை.

ஊர் எல்லையைத் தினமும் நான்கைந்து முறை சுற்றிவரும். ஊரிலுள்ள அத்தனை பேரையும் நம்பி நன்கு தெரிந்து வைத்திருந்தது. குழந்தைகள் தெருவிலே விளையாடும்போது, அவர்களருகே சலுகையோடு போய் உட்கார்ந்துகொள்ளும். குழந்தைகளின் குறுநகைப்பிலே தானும் ஒன்றிப் போகும். விளையாடும்போது கோலிக் குண்டோ, பம்பரமோ அல்லது கிட்டிப்புள்ளோ எட்ட விழுந்து விட்டால் ஒரே பாய்ச்சலில் பாய்ந்து, எடுத்துவந்து கொடுக்கும்.

பாசனத்திற்குக் கால்வாய் ஒன்றிலிருந்து காவிரி நீர் வரும். அபரிமிதமான தண்ணீர் பல முறை பயிரையே பாழ் செய்திருக்கிறது. ஆகவே, திடமான மடையொன்றின் வழியே தண்ணீர் வருவதற்கு வசதிகள் அமைத்திருந்தனர்.

மாலை நேரத்திலும் இருள் சூழ்ந்த நேரங்களிலும் மடைப் பக்கத்தே சற்று நேரமாவது நம்பி உட்கார்ந்திருக்கும். மடைக்குக் காவல் என்றுதான் சொல்ல வேண்டும்.

நம்பிக்கு அடிக்கடி ஆனந்தம் மேலிடும். அப்போதெல்லாம் வழியிலே போகும் பசு அல்லது எருமையின்மேல் அமர்ந்துகொள்ளும். அவை நடக்க நடக்க நம்பிக்கு மகிழ்ச்சி பொங்கும். வயிற்றுக் கவலையென்பதே நம்பிக்கு இருப்பதில்லை. விசேஷ நாட்களில் உண்ண முடியாத அளவுக்கு உபசாரம் கிடைக்கும். அனைத்திற்கும் மேலாக அம்மன் கோயில் பிரசாதமே நம்பிக்குப் போதும்.

அம்மன் கோயில் மிகவும் பிரசித்தி பெற்றது. நெடுங்காலமாக அந்தக் கோயில் விளங்கி வருகிறது. அருள் நிறைந்த விழிகள்; நகை முகிழும் முகம். இவ்வண்ணம் பொலிவோடு விளங்கும் அம்மைக்குப் பூட்ட விலை மதிப்பில்லாத ஆபரணங்கள் பலவற்றை அந்தக் காலத்தே செய்துவிட்டிருந்தனர். அந்த அணிகலன்கள் அனைத்தின் அருமை பெருமைகளை நன்கறிந்தவர் ஆனந்தபட்டர். அர்ச்சகராக அமர்ந்திருப்பவர் பட்டர். அம்மைபால் கொண்ட அன்பு ஆனந்தரை நல்வழியில் நடத்திச் சென்றது. ஒப்பற்ற அணிகலன்களை அன்னைக்கிட்டுக் கோயிலில் பார்க்கும் அவருக்கு, அவற்றின்மீது ஒரு போதும் ஆசை எழுந்ததே இல்லை. அம்பிகைக்குப் பூட்டி மகிழ்வதில் ஆனந்தபட்டருக்குக் கங்கு கரையில்லாத ஆனந்தம்.

அர்ச்சனை முடிந்து பிரசாதங்களை வழங்கும்போது அவர் மனத்திலே நம்பி தோன்றும். நம்பிக்கு நிறையக் கொடுப்பார். அடக்கத்

அநுதாபி

கந்தப்பன் அன்று யார் முகத்தில் விழித்தானே தெரியவில்லை. அவனுக்குத் தொழிலே நடக்கவில்லை. தொழில் என்றால் ஏதோ கைத்தொழில், கமத்தொழில் என்று எண்ணிவிடாதீர்கள்; 'பிக்பாக்கட்.' சாதாரணமாகக் கியூ வரிசை நிற்கும் இடங்களிலும் கூட்டமான இடங்களிலும் கந்தப்பன் முண்டி அடித்துக்கொண்டு நிற்பதைக் காணலாம். ஆளைப் பொறுத்து ஐந்தோ, பத்தோ, ஐம்பதோ நூறோ கிடைக்கும்.

அவன் இந்தத் தொழிலை ஆரம்பித்து இன்றைக்கு இரண்டு மாதங்கள் ஆகின்றன. என்றுமே இப்படி நடந்ததில்லை. ஒரு பஸ் வந்து நின்றது. அதில் நல்ல கூட்டம்! நிற்கவும் இடமில்லை. கந்தப்பன் அதில் ஏறி நெருக்கியடித்துக் கொண்டு நின்றான்.

அடுத்த ஸ்டாப்பிங் பிளேசில் கந்தப்பன் இறங்கி ஓர் ஒதுக்குப்புறம்பான இடத்தில் போய் நின்றான். அவன் நெஞ்சு பூரிப்பால் நிறைந்து போயிருந்தது. நல்ல கனமான பர்ஸல்லவா அவனுக்கு அகப்பட்டிருக்கிறது.

''சாமி! பிச்சை போடுங்கள். நாலு நாள் பட்டினி!''-ஒரு பிச்சைக்காரன் ஓட்டைப் பாத்திரத்தைக் கந்தப்பனிடம் நீட்டினான். பாக்கெட்டினுள் கையைத் விட்டு தன்னிடம் இருந்த ஆறணாவைத் தூக்கிக் கொடுத்து விட்டுப் பர்ஸைப் பிரித்தான். ஆறணா பெரிய காசா? பர்ஸ் அகப்பட்டிருக்கிறதே! திறந்து பார்த்தான்.

அவனுக்கு 'ஷாக்' அடித்தது போலிருந்தது. பர்ஸினுள் கற்றை கற்றையாகக் கடுதாசிகள் திணிக்கப்பட்டிருந்தன. ஒரு செப்பாலடித்த காசுகூடக் காணவில்லை. அத்துடன் ஒரு துண்டும் காணப்பட்டது. அதில்:-''பர்ஸைத் திருடியவருக்கு, என் ஆழ்ந்த அநுதாபங்கள். இப்படிக்கு,
பர்ஸைப் பறிகொடுத்தவன்''

—எம். எச். ஹாமீம்

தோடு அதனை வாங்கிக்கொள்ளும் நம்பிக்கு, நன்றியுணர்ச்சி நிறைந்திருந்தது. பட்டரிடத்து அதற்கு அதிகப் பிரியம் உண்டு. இரவில் பெரும் பகுதியைக் கோயிலிலேயே கழிக்கும் நம்பி, அம்மன் சந்நிதியிலே எந்தத் தீங்கும் நடக்காமல் காப்பதிலேயே கருத்துக்கொண்டிருக்கும். குற்றமுள்ள நெஞ்சுடையோர் யார் வரினும் நம்பி எப்படியோ கண்டுகொள்ளும். அந்த ஆற்றல் அதற்கு எப்படி வந்ததோ?

ஆனந்த பட்டரின் வீட்டிற்குப் புதிதாக ஒருவன் வந்து சேர்ந்தான். நடுத்தர வயதுடைய வாலிபன் அவன். தூரத்து உறவு என்று முறை கொண்டாடிக்கொண்டு வந்தான்.

பட்டரின் குடும்பத்தவர் சிலர் தஞ்சாவூரில் இருந்தார்கள். அந்த இளைஞன் தஞ்சாவூர்தான் தனதூர் என்றும், அவருக்கும் தனக்கும் ஒரு வகையில் உறவு என்றும் பேசி வைத்தான். பட்டரின் பரந்த உள்ளம் அவனுக்கு இடமளித்தது. நாகரிகமான ஆள் அவன். கோயில்கள் பலவற்றையும் கண்டு, அவற்றின் தொன்மையும் கலையும் பற்றிக் குறிப்புகள் எடுத்து வருவது தன் வேலை என்று அவன் - சுந்தரமூர்த்தி - சொன்னபோது பட்டரின் நெஞ்சம் பூரித்தது. ஆனந்தர் மகிழும்படி அன்போடு பேசினன் எப்போதும். என்றாலும் சுந்தரமூர்த்தியின் வதனத்தில் மட்டும் ஒரு விதக் குரூரச் சாயல் படிந்திருக்கத்தான் செய்தது. பட்டர் எதையும் கவனிக்கவில்லை. இரண்டு மூன்று நாட்கள் அவர் வீட்டிலேயே இருந்தான். பட்டர் அவனைக் கோயிலுக்கு இட்டுச் சென்றார். அம்மனின் பெருமையும், கோயிலின் அருமையும்பற்றி அழகாக எடுத்துக் கூறினர் அவர். எல்லாவற்றையும் கேட்டு வைத்தான் சுந்தரமூர்த்தி.

எப்பொழுதும் கோயிலைச் சுற்றிக்கொண்டேயிருந்தான் சுந்தரம். ஏதோ ஒன்றை எதிர் நோக்கித்தான் இவ்வாறு செய்கிறான் என்று அவன் செய்கை ஒவ்வொன்றும் எடுத்துக்கூறி நின்றது. கிராமத்தார் யாரும் அவனைக் கவனிக்கவில்லை.

ஆனால்..?

ஓர் உள்ளம் - வாய் திறந்து எதனையும் பேச இயலாத உயிர் - ஆமாம், நம்பி சுந்தரமூர்த்தியின் ஒவ்வொரு செயலையும் உணர்ந்தது. காரணம், அவன் ஊருக்குப் புதியவன். அன்றியும் ஒரு நாளில் எத்தனை முறை கோயிலைச் சுற்றி வருவது?

மார்கழி மாதம் நடு இரவு. அமாவாசை இருள் கவிந்துகிடந்தது. சந்தடியெல்லாம் அடங்கிப் பல நாழிகையாகிவிட்டது. பனி கொட்டிக்கொண்டிருந்தது. ஊரே துயிலில் ஆழ்ந்து கிடக்கும் அந்த நேரத்தில் நம்பி கொட்டுக் கொட்டென விழித்துக்கொண்டிருந்தது. மரக் கிளையில் ஆடாமல் அசையாமல் சிலையாகிவிட்டிருந்தது. ஆனல் பனிக்குளிர் உடலை வெடவெடவென்று நடுங்கச் செய்தது. நம்பியின் கண்கள் கூர்மையாக ஒளிவிட்டன. மின்மினிப் பூச்சிகள் நம்பியைச் சுற்றி விளையாடிக் கொண்டிருந்தன. கொட்டும் பனியையும் பொருட்படுத்தவில்லை நம்பி.

நேரம் மெதுவாக நகர்ந்தது. ஆந்தையொன்று தொடர்ந்து கத்திப் பயங்கரத்தைக் கிளப்பியது. நம்பியின் உடலெங்கும் உணர்வு நிறைந்தது. மெல்ல மரத்தை விட்டு இறங்கியது. கோயில் சந்நிதியருகே நம்பி விரைந்த போது..

விநாடிகள் ஓடின!

கோயில் பிராகாரத்தினுள்ளே கலகலவென்று ஓர் ஒலி. இரும்புச் சாவிகள் இணையும்போது எழும் கிண்கிணி நாதம். மெதுவாகக் காலடியோசை கேட்டது. இரண்டு மூன்று வாயில்களைத் தாண்டி, துடிக்கும் இதயத்தோடு ஒரு மனித உரு வெளியே வந்தது. கையிலே வெள்ளை வெளேரென்று ஒரு சிறு மூட்டை; இருளிலே அந்த வெண்மை பளிச்சிட்டது. ஒரு கரத்திலே கறுப்பு நிறத்தில் ஒரு பொருள். சந்நிதியைத் தாண்டிய

வுடன் ஒரு பெரு மூச்சு அதனிடமிருந்து வந்தது. முகத்திலே புதுமை யொளி பாய்ந்தது நொடி நேரம். இரண்டு அடி யெடுத்து வைப்பதற்குள்-பின் புறத்திலிருந்து நம்பி பாய்ந்தது. தோள் பட்டையில் காலைவைத்து அழுத்திக் கன்னத்தில் 'பளார் பளார்' என்று ஓயாது அறைந்தது. கையிலும் காலிலும் நிறைந்திருந்த நகங்களால் முகத்திலும் உடலிலும் குத்தித் தோலைக் கிழித்தது. அம்மனித உரு துள்ளியது. நகம் பதிந்த இடத்தெல்லாம் இரத்தம் பீரிட்டது. அவன் உடல் முழுதும் குருதி கசிந்தது. குற்றுயிரும் குலையுயிருமாய்ச் சாய்ந்தான் அவன். தன் வன்மையனைத்தையும் பிரயோகித்துக் குதித்துக் குதித்து நம்பி தாக்கியது. அவன் முகம் சின்னபின்னமாகியது. திணறியவாறு அதனை - சிறு துப்பாக்கியை - சரிப்படுத்திக் கொண்டான். சீற்றம் தணிந்து விட்டாற்போல் நின்றது நம்பி.

அதற்குள் ''டுமீல்.... டுமீல்'' ஒலியதிர்ந்தது.

தொடர்ந்து, ''கிரீச்'' என்று தீனக் குரல் எழுந்தது.

அடுத்த நிமிஷம் நம்பி தரையில் சாய்ந்தது. மார்பு புறத்திலிருந்து உதிரம் கொட்டியது. துடிக்கத் துடிக்க அது முனகிக்கொண்டிருந்தது. அந்த மனிதன் தரை



''நேற்று நீ போட்டுக் கொடுத்த கணக்கெல்லாம் 'தப்பு' என்கிறார் அப்பா, வாத்தியார்!''

யில் சாய்ந்தபடியே கிடந்தான்.

வைகறைப் பொழுது. கரிச்சான் குருவி கத்திக்கொண்டிருந்தது. விடிய இரண்டு மூன்று நாழிகை இருக்கும். பனி கொட்டித் தீர்ந்தது. பள்ளுச்சாமி வெள்ளைச் சங்கை ஊதினான். சங்கொலி எங்கணும் ஒலித்து மக்களை யெழுப்பியது. படித்துறைக்கு நீராடப் போகும் நேரம் அது. கோயிலைக் கடந்துதான் காவேரிக்குப் போக வேண்டும்.

ஆனந்தபட்டர் நித்திரை கலைந்தார். எழுந்த உடனே நீராடக் கிளம்பிவிடுவது அவர் பழக்கம். படுக்கையைச் சுருட்டினார். தலையணைக் கடியிலிருந்த அது? அந்தச் சாவிக் கொத்து..! எங்கே மறைந்தது?

பட்டரின் உடல் நடுங்கியது. குளிரால் அல்ல;

உள்ளம் பதறியது. பீதி அவரைச் சூடியது.

சுந்தரமூர்த்தி படுத்திருந்த இடத்தை நோக்கினார். அங்கே.. அவன் எங்கே? ஓடிவிட்டானா? அம்பிகையின் கருவூலங்கள்?

பட்டர் ஓடினார். கோயிலை நோக்கி ஓடினார். மரத்தடியில் போய் நின்றார். ஓரிருவர் அங்கே நின்றிருந்தனர். அவரது விழிகள் சுற்றிச் சுழன்றன.

நம்பி ஏன் குருதி சோரத் தரையில் கிடக்க வேண்டும்? சுந்தரமூர்த்தி ஏன் பிணமாகிக் கிடக்கிறான்?

ஆனந்தருக்கு அமைதியில்லை. சிந்தை குழம்பியது. சற்று நேரத்தில் படித்துறைக்குப் போவோரெல்லாம் அங்கே கூடிவிட்டனர். துப்பாக்கி, சிறு மூட்டையெல்லாம் அப்படியப்படியே கிடந்தன. சாவிக் கொத்து சுந்தரமூர்த்தியருகே கிடந்தது.

மூட்டையைப் பிரித்தார் பட்டர். அன்னையின் அணிகலன்கள் அத்தனையும் அப்படியே இருந்தன. அனைவரும் திகைத்தனர். ஆனந்தபட்டர் சுந்தரமூர்த்தியைப் பற்றிச் சொன்னார். ஊர் விஷயம் அறிந்தது.

அருணன் அடிவானத்தே அரும்பும் நேரம். ஊரே மரத்தடியில் கூடிவிட்டது. அனைவருள்ளத்திலும் அன்பு விளக்கமாகத் திகழ்ந்த நம்பி, செயலற்றுத் தரையில் சுருண்டு கிடந்தது. அந்த அற்ப ஜீவனின் முகத்திலும் அமைதி நிறைந்திருந்தது. இறுதி மூச்சு வரை, உயிரை மதியாது போராடிப் பலியான நம்பிக்காக அனைவருள்ளமும் இரங்கியது.

நம்பியின் நினைவு என்றென்றும் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அதன் சடலத்தைக் காவேரிக்கரை ஆலமரத்தடியில் புதைத்து மேடை போன்ற சமாதி எழுப்பினர் ஊர் மக்கள்.

செய்தி பிறகுதான் தெளிவாயிற்று. சுந்தரமூர்த்தி என்று சொல்லிக்கொண்டுவந்த அந்த மனிதன் பிரபல கொள்ளைக்காரன் என்ற விஷயம் பரவியது.

நன்றிக்காகக் கொடியவனை யழித்துத் தானும் பலியான நம்பியின்மீது எனக்கும் அனுதாபம் ஏற்படத்தான் செய்தது. ''பலி.. பலி'' என்று என்னுள்ளே எழுந்த முணுமுணுப்பு மெல்லத் தேய்ந்து மறைந்துகொண்டிருந்தது.

தோட்டம்

தோட்டம் பெரிய தோட்டம்—மிகத்
தூய்மை யான தோட்டம்
வாட்டம் எல்லாம் ஓட்டும்—பல
வண்ண மலர்த் தோட்டம். (தோட்டம்)

கமுகு வானை முட்டும்—கருங்
காக்கை கூடு கட்டும்
குமுதம் தேனைச் சொட்டும்—பழக்
குலையும் கைக்கு எட்டும். (தோட்டம்)

மல்லி கைமணம் வீசும்—அதில்
வண்டுகள் கதை பேசும்
வெள்ளி முலாம் பூசும்—ஒளி
விண்ணி னின்று வீசும். (தோட்டம்)

குயில்கள் கானம் பாடும்—ஒன்று
கூடி யேவிளை யாடும்
மயில்கள் நடன மாடும்—அதை
மந்தி கள்கொண் டாடும். (தோட்டம்)

குருவி வாலை ஆட்டும்—இரை
குஞ்சின் வாயில் ஊட்டும்
அருகில் பறந்து காட்டும்—குஞ்சு
அழகுத் தலையை நீட்டும். (தோட்டம்)

காடை பாய்ந்து தாக்கும்—அது
காணக் களிப்பை ஆக்கும்
கோடை வெம்மை போக்கும்—நிழல்
குளிர்ந்து சோர்வு நீக்கும். (தோட்டம்)

—வித்துவான் M. S. பஞ்சாபகேசன்.

நீங்களும் நானும்

ஆர்வி

குமரகுரு, நெல்லை.

கே: உலகிலேயே மிகச் சிறந்த இலக்கியம் எது?

ப: வால்மீகியின் ராமாயண காவியமே உலகில் மிகச் சிறந்த இலக்கியம். இதை நாம் மட்டும் சொல்லவில்லை; மேனாட்டு அறிஞர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

டி. பத்மா, மாம்பலம்.

கே: அமெரிக்க ஜனாதிபதிகளில் ஒருவர் தையற்காரராக இருந்தவராமே. உண்மையா?

ப: அப்படித்தான் தெரிகிறது: ஆண்ட்ரூ ஜான்ஸன் என்பது அவர் பெயர்.

தஞ்சை மணி, தஞ்சை.

கே: உலகம் எந்தச் சக்தியால் இயங்குகிறது?

ப: நான் அறிந்தவரையில் மூன்றுவிதமான சக்திகளினால் உலகம் இயங்குகிறது. மின்சாரம், வெப்பம், அன்பு ஆகிய சக்திகளே அவை.

ரா. மாதவன். கடலூர்.

கே: கனவு என்பது என்ன?

ப: தூக்க நிலையில் உண்டாகும் விசித்திரக் கற்பனை. அந்த எண்ணங்களையும் சில ஜோஸ்யர்கள் காசாக்கி விடுகிறார்கள்.

சுரேஷ்ராம், கோவை.

கே: உலகின் மிகப் பெரிய யுத்தத்தை நடத்தியவர் யார்?

ப: ஜெர்மன் சர்வாதிகாரியாக இருந்த அடால்ப் ஹிட்லர்.

அஜீஸ், பாபநாசம்.

கே: வெற்று வெளியில் சென்ற ரஷ்ய சந்திரனிலிருந்து எப்படிப் பூமிக்கு ஒலி கேட்டிருக்க முடியும்?

ப: பூமியிலிருந்து பல ஆயிரம் மைல்வரை ஈதர் மண்டலம் வியாபித்திருக்கிறது. ஒலி ஈதரில்தான் பிரயாணம் செய்கிறது.

ஜி. எஸ்., சென்னை-6.

கே: இந்தியாவில் இப்போது மலிவாகக் கிடைக்கக்கூடிய பொருள் எது?

ப: இந்திய சர்க்கார் பரிசுகள்.

மோகன், சென்னை-5.

கே: பணம் பேசுமா?

ப: ஆமாம், பேசும். ஆனால் அது ஒருவரிடம் பேசினால், பலர் வயிறெரிந்து அழுவார்கள்!

இளம்வழுதி, செங்கை.

கே:....என்ற பிரபல நடிகர் வடநாட்டுக்கு நடிக்கப் போனால் அவருக்கு லட்சக் கணக்காகப் பணம் கொடுக்கக் காத்திருக்கிறார்களாமே!

ப: கொடுக்கக் காத்திருப்பவர்கள் யார்? இங்கிருப்பவர்களா? அப்படியாவது தொலையட்டும் என்று நினைக்கிறார்களோ!

சுபான், கொழும்பு.

கே: ஈரான், ஈராக், தாய்லாந்து இந்த நாடுகளில் பழைய பெயர்கள் என்ன?

ப: ஈரானின் பழைய பெயர் பெர்ஸியா. ஈராக்தான் மெஸபெட்டோமியா. தாய்லாந்து என்பது சயாம்.

ஆர். லக்ஷ்மி, பம்பாய்-19.

கே: மரணத்துக்கு அப்பால் ஒரு வாழ்வு உண்டா?

ப: உண்டு; அதுதான் புகழ் வாழ்வு. அந்தப் புகழ் வாழ்வு வாழ்வதே மனிதனின் உயர்ந்த லட்சியம்.

மணிசேகரன், மதுரை.

கே: மிக மிகக் குறைந்த வருவாயுள்ள மிக மிகப் புனிதமான தொழில் எது?

ப: நம் நாட்டில் பள்ளிக்கூடத்து ஆசிரியர் தொழில்.

கதை: 'ஆர்வி' கடற் புலி சித்திரம்: ஸாமி


மரக்கலத்தின் மேல் தளத்தில், கிழவர் மேலும் தொடர்ந்து . . . .
ஆனால் சோழ இளவரசனை வெளியே விட்டு வைத்தால் அல்லவா அவன் மணிபல்லவப் படைத் தலைவனை அழிப்பதற்கு?
அப்படியானால் சிறைப்படுத்தி விட்டானா?
சோழ இளவரசனைச் சிறைப் படுத்தி, அவனை இரவோடு இரவாக, மணிபல்லவ நாட்டுக்குச் சென்ற கலத்தில் கொண்டு போனார்கள். கற் கோட்டையில் இருந்த சிறையில் அடைத்தார்கள். சங்கிலியால் காலைப் பிணைத்தார்கள்.
சிறையில் செத்தாலும் சாவேன். உன் சோற்றைத் தொட மாட்டேன். கொண்டு போ!
இவ்வாறு ஒரு வாரமாகியும் அவன் உணவைத் தொடாததால், படைத்தலைவனே சிறைக்குள் வந்திருந்தான். அவனுடன் அவன் குமாரி மணிபல்லவ மங்கையும் வந்திருந்தாள்.
உணவு கொள்ளா விட்டால் உன்னை விட்டு விடுவார்கள் என்று எண்ணுகிறாய்?
போகும் போது பல்லவ மங்கை தன் தந்தைக்குத் தெரியாமல் ஒரு முடிச்சை சிறைக் கதவின் பக்கத்தில் நழுவ விட்டுச் செல்கிறாள்.
அந்தக் கற் கோட்டையிலிருந்து தப்பித்துச் சென்று விட்டால் என்ன அப்பா, செய்கிறது?

(தொடரும்)

6. இரு கடிதங்கள்!

அடுத்த வீட்டுக்கு ஸ்ரீதரனை அனுப்பிவிட்டு உள்ளே வந்த ஸம்பத்திற்கு ஒரு கவலை விட்ட மாதிரி இருந்தது. மேற்கொண்டு சில வேலைகள் அவனுக்கு இருந்தன. ஏனெனில் அவனுக்கு அந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் வேறு சந்தர்ப்பம் எதுவும் கிடைக்காது. தேடுகிற அவசரத்தில் அவன் அங்கே ஒன்றையுமே சரியாகக் கவனிக்கவில்லை. மறுபடியும் தேடிப் பார்க்கவேண்டும். பீரோ, மேஜை, அலமாரி எல்லாவற்றையும் மறுபடியும் திறந்து திறந்து பார்த்தான். எதை எதையோ எடுத்துப் பைக்குள் போட்டுக்கொண்டான். 'சரி, இனி மேல் போகலாம்' என்று அவன் நினைத்துத் திரும்பிய பொழுது அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. எதிர்த்தாற்போல் கட்டிலிலிருந்த உருவம் எழுந்து இறங்கி வந்தது. ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவன் கையை இறுகப் பிடித்துக்கொண்டது. ''ஹா ஹா'' வென்று அசட்டுச் சிரிப்புச் சிரித்தது.

பரிசுபெற்ற தொடர்கதை:

''ஏண்டா! திருட்டுப் பயலே!.. திருட்டுப் பயலே!'' என்று கத்தியது. டார்ச் விளக்கை அந்த உருவத்தின் முகத்தில் திருப்பினான் ஸம்பத். என்ன ஆச்சரியம்!.. எதிரே நின்றுகொண்டிருந்தாள் ஒரு பெண். பத்து வயதுதான் இருக்கும்..பரட்டைத் தலை..மங்கிய கண்கள்..அசட்டுக்களை..ஐயோ! அவள் குரல்..! அவள் ஒரு பைத்தியமா? அந்தப் பரிதாபமான, அசட்டுத்தனமான அவளுடைய முகத்தில் ஏன் பைத்தியக் களை வழிகிறது!

''யார் நீ?'' என்றான் ஸம்பத் அதட்டலாக.

''நானு?....யார்னு கேட்கிறே?..திருடா.. உன்னை என்ன செய்கிறேன், பார்!..'' அவள் ஒரு ரிவால்வரை நீட்டினாள். ஸம்பத் அவள் பிடியிலிருந்து திமிறினான். அவள் பலமாகப் பிடித்துக்கொண்டிருந்தாள்!

''அண்ணா! அண்ணா! ஓடிவா.. இவனைப் பிடித்துக்கொள்!'' என்று அவள் கத்தினாள்.

ஸம்பத்திற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவனுடைய வலது கை சடாரென்று உயர்ந்தது. ஓங்கி அவள் கன்னத்தில் ஓர் அறை அறைந்தான். அவளுடைய பிடி தளர்ந்தது. 'தடா' லென்று அவள் கீழே சாய்ந்தாள். கேவிக்கேவி அழ ஆரம்பித்து விட்டாள் அவள். 'ஐயோ! பைத்தியமே!' ஸம்பத்திற்குப் பரிதாபமாக இருந்தது. டார்ச் விளக்கைப் போட்டு, ''இந்தா! ஏன் அழறே?...எழுந்திரு.. நீ யார்?.. அதைச் சொல்லு முதலில்..'' என்றான்.

அவள் பதிலே சொல்லவில்லை. பலமாக அழ ஆரம்பித்துவிட்டாள்.

''இந்தா பெண்ணே!....

இனிமே அடிக்கல்லே....எழுந்திரு..'' - அழுகை நிற்கவில்லை.

''அழாதே! இனிமே அடிக்கவே மாட்டேன்.''

அவள் அழுகை நிற்க வெகு நேரம் ஆகிவிட்டது.

''..உங்க அண்ணு எங்கே?'' என்ருன் ஸம்பத்.

''அவங்க எங்கேயோ போயிருக்காங்க'' என்ருள் அவள்.

''அது சரி; நீ யார்? உங்க அப்பா அம்மாவெல்லாம் யாரு?''

''அவங்களெல்லாம் எங்கேயோ இருக்காங்க..நீ யாரு?..எனக்கு நீயும் ஒரு அண்ணஞ?..''

''ஆமாம்'' என்ருன் ஸம்பத் சமயோசிதமாக.

''இனிமேல் கன்னத்தில் அறைய மாட்டியே?..''

''மாட்டேன்..மாட்டேன்.... நீங்களெல்லாம் எந்த ஊர்?..?''

''அண்ணு வரட்டும்; கேட்டுச் சொல்றேன்..''

''அது சரி! நான் அப்புறம் வறேன்.''

எனக்குத் தெருவிலே போய்ப் பார்க்கணும்னு ஆசையா இருக்கு. எங்க அண்ணு வந்தா வெளியிலே போக விடமாட்டான்..''

''அவன் ரொம்ப நல்லவஞ?''

''இல்லே! ரொம்பக் கெட்டவன்..''

''ஹா!..'' என்ருன் ஸம்பத். அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது.

''அழாதே! உன் பேரென்ன?''

''எனக்குத் தெரியாதே!''

''அண்ணு எப்படிக் கூப்பிடுவா?''

''என்னையா..என்னைக் 'கல்கத்தா'ன்னு கூப்பிடுவான்.''

'கல்கத்தா' 'கல்கத்தா' என்று அவன் வாய் முணுமுணுத்தது.

''சரி, வறேன் கல்கத்தா! அப்புறம் வறேன்....உங்க அண்ணு கிட்டெ நான் வந்ததைச் சொல்ல வேண்டாம்..''

''சொல்லல்லே...எப்பொ வருவே?.... வரும்போது எனக்குச்சாக்லெட் வாங்கிண்டு வா'' என்ருள்.

''நிறை..ய.....வரட்டுமா?'' என்

றுன் ஸம்பத். அதே சமயம் அந்த வீட்டு வாசலிலிருந்து, ''ஐயோ! திருடன்! திருடன்!'' என்ற அலறல் கேட்டது. அது சுப்புதான் என்று ஸம்பத்திற்குத் தெரிந்தது. ஜன்னல் வழியாகப் பாய்ந்து அடுத்த வீட்டிற்குள் நுழைந்தான். ஆனுல் அவன் மாடிப் படியின் ஆரம்பத்திற்கு வந்த பொழுது இருட்டில் அந்தக் கிழவனுர் நின்றுகொண்டிருந்தார்.

''என்ன, காரியம் ஆச்சா?'' என்று கேட்டார் அவர்.

''என்ன, காரியம்?.... ஐயோ, சுப்புவைப் போய்ப் பிடியுங்கள்....ஆபத்து! சீக்கிரம்!..''

''ஐயோ! அது சுப்புவா.. கத்தினது?....அடேடே! எப்போ வெளியே போனுன்?



..உன் தம்பி வெளியே போனுனே ....அப்புறம்தான் போனுன், பார்த்தேன்.''

இருவரும் வாசலுக்கு ஓடினுர்கள். சுப்புவைக் குண்டுக்கட்டாகக் கட்டி வீட்டுக்குள் தள்ளினுர்கள்.

''அசட்டுப் பிணமே! சும்மாக் கிட..'' என்ருர் கிழவனுர். நல்ல வேளே, கூட்டம் கூடவில்லே....

''தாத்தா! நான் வறேன்..நேரமாகிறது..காலேயிலே வறேன்..'' மோட்டார் சைக்கிள் கிளம்பிவிட்டது. ஸம்பத்திற்கு அன்று ஒரே குஷி! எல்லாம் வெற்றி! வெற்றி மேல் வெற்றி! ஐயோ பாவம்! அதே சமயம் அந்தத் தெருக் கோடியில் ஸ்ரீதரன் மூட்டையைப் பறிகொடுத்துவிட்டு நின்றது அவனுக்கு எப்படித் தெரியும்?

* * *

பஞ்சநாத முதலியாருக்கு அன்று 'முன் இரவில்' தான் அந்தக் கூர்க்கா ஒரு மோசக்காரன் என்று தெரியவந்தது. உடனே அவர் அமர்க்களம் செய்யவில்லே. விஷயத்தைத் தெரிந்துகொண்டு ஜாக்கிரதையாக இருப்பது என்று முடிவு செய்தார். எதற்கும் ஸப் இன்ஸ்பெக்டர் பட்டாபியை அழைத்து யோசனே கேட்கலாம் என்று தீர்மானித்தவராக போனே எடுத்தார். ஆனுல் அவர் முழு விவரத்தையும் பட்டாபிக்குத் தெரியப்படுத்துவதற்குள் 'போன்' கனெக்ஷன் விட்டுப்போய்விட்டது. ஆமாம்! கூர்க்கா கடிதத்தைப் பையனிடமிருந்து வாங்கிக்கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தானல்லவா! மாடியில் நிழலாடுவதைக் கவனித்துவிட்டான் அவன். அது முதலியார்தான் என்று நிச்சயமாக அவனுக்குத் தெரிந்துவிட்டது. உடனே அவசரமாக ஒரு காரியம் செய்தான். பக்கத்திலிருந்த 'போன்' கம்பத்தில் யோசனே செய்யாமல் ஏறினுன். 'கடக் கடக்' என்று நான்கைந்து கம்பிகள் அறுபட்டன. கூர்க்கா அப்புறம் அங்கே நிற்கவில்லே. 'விடுவிடெ' ன்று நடந்தான். தெரு விளக்கில் பையன் கொடுத்த கடிதத்தைப் பார்த்தான். அதில், ''பெட்டி கிடைத்துவிட்டது. வீட்டுக்கு அனுப்பிவிட்டேன்.. வெற்றிதான்....உடனே தி. ந. மி. விக்கு வா. உதவி தேவை'' என்று எழுதியிருந்ததை அவன் வாய் முணுமுணுத்தது. வேகமாக வந்து ஏதோ ஒரு சிறிய கடைக்குள் நுழைந்து ஒரு கடைக்காரனே எழுப்பி ஏதோ சொன்னுன். அங்கிருந்து வரும்பொழுது ஒரு சைக்கிளுடன் வந்தான். சைக்கிள் பறந்தது. அப்பொழுதுதான் விநாயகத்தையும் ஸ்ரீதரனேயும் அவன் சந்தித்தான். விநாயகத்தை அவனுக்குத் தெரியும். ஏனெனில் அவன்தான் விநாயகத்தின் போலீஸ் உடையை ஏமாற்றி வாங்கி வந்தது. ஸ்ரீதரனிடம் அவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. திருவல்லிக்கேணியிலிருந்து இவன் எங்கே போகிருன்? மூட்டையில் அநேகமாகப் பெட்டி இருக்கும் என்று அவனுடைய உள்ளுணர்வு கூறியது. சமயோசிதமாக நடந்துகொண்டு இருவரையும் ஏமாற்றப் பெட்டியை வாங்கிக்கொண்டு போய்விட்டான். அதே சமயம் பஞ்சநாத முதலியார் அங்கே தவியாய்த் தவித்துக்கொண்டிருந்தார். கூர்க்கா அங்கிருந்து போய்விட்டான் என்று தெரிந்தும் என்ன செய்வது அந்த வேளேயில்!

* * *

ஸப் இன்ஸ்பெக்டர் பட்டாபி கலவரத்துடன் அன்றிரவு தம் அறையில் உலாவிக்கொண்டிருந்த பொழுதுதான் 'போன்' வந்தது. போனில் பேச ஆரம்பித்ததுமே அவருக்குக் குழப்பமாகிவிட்டது. யார் பேசுவது! என்று தெரிந்துகொள்வதற்கு முன்னுல் 'போன் கனெக்ஷன்' விட்டுப்போய்விட்டது. ஆனுல் பேசியது முதலியார்தான் என்று அவர் ஊகித்துவிட்டார். ஆனுல் 'அந்த உளவு சொல்லிக்கொடுக்கும் திருடனேக் கண்டுபிடித்துவிட்டேன்' என்று சொன்னுரே அது யாராக இருக்கும் என்றுதான் யோசித்தார்.

அப்படி அவர் யோசித்துக்கொண்டிருக்கும் பொழுதுதான், மோட்டார் சைக்கிள் வரும் சப்

தம் கேட்டது. ஸம்பத்தை அவர் ஒவ்வொரு விநாடியும் எதிர்பார்த்தார். அவர் எதிர்ப்பார்த்தது வீண் இல்லை. ஸம்பத்தும் ஸ்ரீதரனும்தான் வந்துகொண் டிருந்தார்கள். அப்பொழுது மணி இரண்டு.

''ஸம்பத்! அகப்பட்டதா? ஏன் இவ்வளவு நேரம்?'' என்று பரபரப்புடன் கேட்டார் அவர்.

''அகப்பட்டது அப்பா!'' என்ருன் ஸம்பத்.

''எங்கே இரும்புப்பெட்டி?..''

''அது..வா?..அது கைக்கு எட்டி வாய்க்கு எட்டவில்லை, போங்கள்.''

பட்டாபியின் முகம் சுருங்கியது.

''அப்பா! அதைவிட முக்கியமான விஷயங்கள் சேகரித்துக் கொண்டு வந்திருக்கிறேன். எதிரிகளுக்கு வலை வீசிவிட்டேன். இனிமேல் வெற்றிதான்.''—பெரிய துப்பறியும் உத்தியோகஸ்தர் மாதிரி பேசினுன் அவன்.

''என்ன ஸம்பத்! நடந்ததையெல்லாம் ஒன்று விடாமல் சொல்'' என்ருர் அவர் நிதானமாக.

''இன்று மாலையிலிருந்து எவ்வளவோ சம்பவங்கள் நடந்திருக்கின்றன அப்பா! எல்லாவற்றையும் விவரமாகச் சொல்கிறேன். ஸ்ரீதரன் எனக்கு எவ்வளவோ துணையாக இருந்தான்.''

அதற்குள் ஸ்ரீதரன், ''என்ன ஸம்பத்! நான் உனக்கு என்ன துணையாக இருந்தேன்? கையில் கிடைத்ததையும்..'' என்ருன்.

''ஸ்ரீதரா, அவசரப்படாதே! நான் சொல்கிறதைக் கேள்.'' ஸம்பத் அவனை அமர்த்திவிட்டு, ''அப்பா! இன்றைய வெற்றி பெரிய வெற்றி நமக்கு!..'' என்ருன். பட்டாபியின் முகத்தில் ஒரு பெருமிதப் புன்னகை நெளிந்தோடியது. அன்று மாலையிலிருந்து அதுவரை நடந்ததையெல்லாம் ஒன்று விடாமல் சொன்னுன் ஸம்பத். அவரும் பொறுமையாகக் கேட்டார்.

''அப்பா? அந்தக் 'கறுப்புக் கண்ணுடி' ஆளுக்குத் துணையாக இரண்டு ஆட்கள். ஒன்று அந்தக் கூர்க்காதான்! இன்னொருவன்.. கடற்கரையிலே வேர்க்கடலை விற்றுக்கொண்டு திரிகிற பையன். இதைத் தவிர அவன் வீட்டிலேயே அந்தப் பைத்தியக்காரப் பெண் இருக்கிருள். அவள் பைத்தியமா அல்லது நடிப்பா என்று இன்னமும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. அவள் நிஜப்பைத்தியமாக இருந்தால் நிச்சயம் நமக்கு வெற்றிதான்!..அப்பா! இன்று மாலை அந்தப் பெட்டியை வாங்கிக் கொண்டு போனவன் யாரென்று நினைக்கிறீர்கள்? அந்தக் கறுப்புக் கண்ணுடிதான்! யாரோ ஒரு கான்ஸ்டபிளின் உடையைத் திருடியிருக்கிருன். தற்செயலாக நம்பரைப் பார்த்தேன். 288 என்றிருந்தது. ஸ்டேஷனில் 288 யாரு அப்பா?''

''அது தெரியாதா? நம்ம விநாயகம்தான்; அவன் கூட திருவல்லிக்கேணி 'கறுப்புக் கண்ணுடி'யின் பங்களாவுக்குத் தான் போயிருக்கிருன்.''

''ஐயையோ! அவனை ஏன் அனுப்பினீர்கள்?''

''அதனுல் ஒன்றும் பாதகமில்லை, ஸம்பத்! விநாயகத்தினுல் ஒரு காரியமும் சாதிக்க முடியாது. உதை வாங்கிக்கொண்டு வரப் போகிருன், பார்!'' பட்டாபி சிரித்தார்.

''அவனுல் நமக்கு இடைஞ்சல் தான் ஏற்படும், அப்பா?''

''இல்லை: அவன் போகிற போக்கில் விட்டுத்தான் அவனைத் திருப்ப வேண்டும்..அது கிடக்கிறது. அப்புறம் சொல்....''

''அடுத்த வீட்டு அசட்டுச் சுப்பு இருக்கிருனே, அவனை நாம் கைக்குள் போட்டுக் கொண்டால்தான் நல்லது. எப்படியோ அவன் அவர்கள் வலையில் விழுந்து விட்டான். அப்புறம் அந்த வேர்க்கடலைக்காரப் பையன். அந்த முட்டாள், மாலையில் எங்களிடம் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்து விட்டுப் போனுன். வேர்க்கடலை வாங்கினேம் அவனிடம். அதை மடித்திருந்த கடிதாசு இருந்தது. இதோ இருக்கிறது பாருங்கள்..'' என்று கசக்கிய இரு கடிதங்களை நீட்டினுன் ஸம்பத்.

ஆச்சரியத்துடன் அதை வாங்கிப் படித்த பட்டாபி, 'ஆ!..'வென்று அலறி மூர்ச்சையானார்!

* * *

விநாயகம் ஸ்ரீதரனை வழி மறித்து மூட்டையைக் கூர்க்கா விடம் கொடுத்து அனுப்பினு னல்லவா? அதே சமயம்தான் அந்தத் தெருக்கோடியில் சுப்பு வின் தீனமான குரல் கேட்டது. விநாயகம் ஒரே ஓட்டமாக ஓடினுன், தெருவின் கோடிக்கு. எதிரே வந்த மோட்டார் சைக் கிளைக் கூட அவன் கவனிக்கவில்லை. ஆனுல் அவனுக்கு ஒரு சந்தேகம் போகும் பொழுதே! 'அந்த அபயக் குரல் ஒரு தடவை கேட்டு ஏன் அடங்கிவிட்டது? யாராவது பைத்தியமாக இருக்குமோ?' என்று எண்ணினுன். கடைசியாகக் 'கறுப்புக் கண்ணுடி' பங்களாவின் வாசலில் வந்து நின்ருன் அவன். அங்கே வேட்டை நாய் வேலப் பன் 'வள்'ளென்று விழுந்தான். ஆனுல் விநாயகத்திற்குத் தைரியம் வந்தது.

''டேய்? நாயே! அந்தக் 'கறுப்புக் கண்ணுடி' எங்கேடா?''

''டேய்! நாய் பேய்னு பேசினே புட்டுப்புடுவேன், புட்டு!''

''நான் யார்னு தெரியல்லே உனக்கு?..கான்ஸ்டபிள் விநாய கப்டா நான்..நான் போலீஸ்..''

''கான்ஸ்டபிள் முகரையைப் பாரு..போடா வெளியே..''

''இருக்கானு அந்த ஆள்? இல்லையா?''

''இல்லே....''

''பின்னே ஏன் மாடியிலே விளக்கு எரியுது?..யார் அங்கே இருக்கிறது?'' அப்பொழுதுதான் வேலப்பன் அங்கே விளக்கு எரிவ தைக் கவனித்தான்.

''அதுவா! அங்கே பிசாசு..''

''என்ன, பிசாசா? என்னடா கதை விடறே..பிசாசா இருக்கு?''

மாடி ஜன்னலேயே பார்த்துக் கொண்டிருந்த விநாயகத்தின் முகம் வெளிறியது. ஏனெனில் அந்த ஜன்னலின் ஓரத்தில் ஒரு கரிய உருவம் வந்து நின்றது. பரட்டைத் தலே. குட்டையான உருவம். அது அந்தப் பெண் 'கல்கத்தா'தான்! மறு நிமிஷம் விநாயகம் விழுந்து அடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தான். அந்தக் கால்களுக்கு எங்கிருந்து தான் பலம் வந்ததோ? தியாகராய நகர் வந்த பின்தான் அவன் நின்ருன். கண்ணை இருட்டியது. மூச்சைப் பிடித்துக்கொண்டு நடந் தான். நிச்சப்தமாக இருந்தது தெரு. ஒரே உறக்கம், அமைதி. ....அந்தச் சமயத்தில் தற்செய லாக எதிர்த்தாற்போலிருந்த ஒரு பங்களாவின் பக்கம் கண் பார்வை நின்றது. ஆமாம். அந்தப் பங்களா வின் தண்ணீர்க் குழாய் வழியாக ஓர் ஆள் 'சரசர'வென்று ஏறிக் கொண் டிருந்தது. நன்கு தெரிந் தது. விநாயகம் 'சடாரெ'ன்று இருளில் ஒதுங்கி நின்று கவனித் தான். 'அதோ வாசலில் கூர்க்கா உட்கார்ந்திருக்கிருனே. மடப் பயல் அதைக் கவனிக்காமல் எங்கேயோ பார்க்கிருனே? போய் அவனை உதவிக்கு அழைக்க லாமா என்று ஒரு கணம் நினைத் தான். ஆனுல் அந்தக் கூர்க்கா அந்தத் திருடனை நன்ருகப் பார்த் தான். பார்த்தும் ஏன் அவனைப் பிடிக்கவில்லை. அதற்குள் குழாய் வழியாக ஏறிய உருவம் உள்ளே போய் விட்டது. விநாயகத்தின் மூளை வேலை செய்தது. இருளோடு இருளாக எதிர்ப்புறத்திற்கு ஓடி ஞன். அந்தப் பங்களாவின் காம்ப வுண்டுச் சுவர் ஓரமாக ஒரே புத ராக இருந்தது. புதருக்குள் போய் ஓரமாக நின்று கொண்டான். அதே சமயம் அவனுடைய அதிர்ஷ்ட தேவதை எறும்பு உரு வத்தில் மாறி அவன் காலே 'வெடுக்' கென்று கடித்தது. அந்த அதிர்ச்சி யில் புதரில் சலசலப்பு உண்டா கியது. கூர்க்கா டார்ச்சைக் கையிலெடுத்தான். அவன் நோக் கத்தை யறிந்து விநாயகம் ஒரே தாவில் பங்களாவின் வாசல் குறட் டுப் பாலத்தினடியில் போனுன்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் கிளைக் கழகம்

வாணியம்பாடி
- உபதலைவர்: எஸ். பீமராவ்
- காரியதரிசிகள்: டி. எஸ். குஞ்சிதபாதம், எஸ். சுப்பராவ்
- பொருளாளர்: எஸ். பாலகிருஷ்ணன்.

செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 'கதை மலர்' என்ற கையெழுத்துப் பத்திரிகை (மாத இதழ்) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கதை அனுப்பும் விலாசம்: எஸ். பீமராவ், 275. எம். எல். சலாம் சாகிப் தெரு, பெரியபேட்டை, வாணியம்பாடி (வ. ஆ.)

பழனி
- உபதலைவர், செயலாளர்: ம. கி. நாகராஜன்
- பொருளாளர்: இரா. ராஜேந்திரன்.

தேசீய மாணவர் சங்கத்தின் சார்பில் கிளைக்கழகம் ஆரம்பிக்கப் பட்டு, பத்துப் பேர்கள் கொண்ட செயற்குழு ஒன்றும் அமைக்கப்பட் டுள்ளது. 'மணமலர்' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் 'கலைவாணர் படிப்பகம்' என்ற நூலகமும் நடத்தப்படுகின்றன. விலாசம்: தேசீய மாணவர் விடுதி, C/o சென்டிரல் ஸ்டோர்ஸ், 29/30, பெரிய கடைத் தெரு, பழனி.

கோவை
- உபதலைவர்: சோ. அசோகன்
- செயலாளர்கள்: ரா. பக்தவத்ஸலம், ஆ. ராஜகோபாலன்
- பொருளாளர்கள்: ரா அரங்கநாதன், வெ. சண்முகம்.

ஐந்து பேர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. 'அறிவொளி' என்ற கையெழுத்துப் பத்திரிகை (மாதமொருமுறை) வெளியிடப்படுகிறது. கதை அனுப்பும் விலாசம்: சோ: அசோகன், 5. ரேஸ்கோர்ஸ், கோவை.

பேனு நண்பர்கள்

1. எம். கணேஷ், 16, நாகேசுவர ஐயர் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-6.
2. தெ. பா. சீதாராமன், 28, தம்புச் செட்டித் தெரு, சென்னை-1.
3. அ. கபிரியேல், 62, ஏன வெங்கடாசல பிள்ளைத் தெரு, பாண்டிச்சேரி.
4. வி. எம். பஜ்லுல்லா, C/o வி. ஹாஜி அப்துல் சத்தார் சாகிப், இரும்பு வியாபாரம், பஜார் வீதி, ஆம்பூர். (வ. ஆ.)
5. வே. ரங்கநாதன், 75, மு. பி, கோவில் தெரு, புவனகிரி, (தெ. ஆ.)
6. பி. கலியமூர்த்தி, 26, சிவாஜி நகர், தஞ்சாவூர்.
7. இரா. கலிய பெருமாள், 3054, டபீர்குளம் ரோடு, கீழவாசல், தஞ்சாவூர்.
8. ஏ. காதர்மீரா. C/o எஸ். பி. என். ஏ., பெரிய கடைவீதி, மதுக்கூர், தஞ்சை ஜில்லா.
9. கா. ஷண்முகசுந்தரம், 45, சொக்கலிங்கம் பிள்ளை வீதி, குப்பிபாலம் ரோடு, ஈரோடு.
10. ஜி. மோகனதாஸ், 6, காளி அம்மன் கோவில் தெரு, ஓரத்த நாடு, தஞ்சைஜில்லா.

(Regd. as a Newspaper in Ceylon.) Regd. No. M. 5542

கண்ணன்

வெளியீடுகள்

			ரூ. நயா பைசா
1.	தங்க மாம்பழம்	ராஜி	2·00
2.	லீடர் மணி	ஆர்வி	1·50
3.	சைனா சு-சூ	ஆர்வி	1.50
4.	ஜிம்மி	பெ. தூரன்	1·50
5.	சந்திரகிரிக் கோட்டை	ஜனா	1·25
6.	அசட்டுப் பிச்சு	ஆர்வி	1·00
7.	மஞ்சள் பங்களா	ஜி. ஜயராமன்	1·00
8.	சின்ன ராஜா	வாசகன்	0·75
9.	பவழவல்லி	கி. ரா.	0·75
10.	கவிஞர் கதை	கி. வா. ஜ.	0·62
11.	விளையும் பயிர்	கி. வா. ஜ.	0·50
12.	சமர்த்து மைனா	தி. ஜ. ர.	0·50
13.	அபாயச் சங்கு	நீலம்	0·50
14.	ஜக்கு	ஆர்வி	0·50
15.	ஜம்பு	ஆர்வி	0.50
16.	ஏரிக்கரை மாளிகை	ஜனா	0·50
17.	மின்னல் அரக்கன்	ஜனா	0·50
18.	ராஜாவும் குருவியும்	சோமசன்மா	0·50
19.	கழுகும் கிளியும்	சோமசன்மா	0·50
20.	தவளையும் காளையும்	சோமசன்மா	0·50
21.	விஞ்ஞானம் பேசுகிறார்	பெ. நா. அ.	0·50
22.	பாரஸீக ரோஜா	ஆர்வி: ஸாமி	0·32
23.	புலிக் குட்டி	ஆர்வி: ஸாமி	0·40
24.	தூங்கும் அழகி	ஆர்வி: ஸாமி	0·25
25.	குளிகைத் தீவு	ஆர்வி: சங்கர்	0·25
26.	மாஸ்டர் பாலகுமார்	ஆர்வி: ஸாமி	0·25
27.	நீச்சல் பழக்கம்	டிமான்ஸ்டிரேட்டர்	0·20
28.	பார்வதியும் ஏழு சித்திரக்குள்ளர்களும்	எஸ். ஜே.	0·20
29.	கோழி விதைத்த நெல்	சூடாமணி	0·20
30.	தங்கத்தின் பந்து	சூடாமணி	0·20
31.	என் பேர் என்ன?	சூடாமணி	0·20

சந்தாதாரர்களுக்குக் கமிஷன் உண்டு

ஐந்து வயது முதல் பதினாறு வயது வரையில் உள்ளவர்களுக்காகப் பல அழகான கண்ணன் வெளியீடுகள் உள்ளன.

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை -4.